# ஆண்டறிக்கை

# 2023

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## நோக்கு

சிறுவர்களுக்கு சாதகமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

## செயற்பணி

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின்

## 2023 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபை

| தொடர் இல. | பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலம் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01 | திரு உதயகுமார அமரசிங்க | தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (2021.11.22) | சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம், கங்கொடவில, நுகேகொடை |
| 02 | சட்டத்தரணி திருமதி சுஜாதா அழஹப்பெரும | பிரதித் தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (2019.12.24) | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி |
| 03 | டாக்டர் திருமதி சுவர்ணா விஜேதுங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2020.01.22) | சிரேஷ்ட உளவியல் மருத்துவ நிபுணர் (சிறுவர் மற்றும் இளம்பருவ) ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, பொரளை |
| 04 | திரு அஜித் தென்னக்கோன் | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2022.07.28) | பிரதம நீதிமன்ற மருத்துவர் |
| 05 | திரு சுசந்த பாலபட்டபெந்தி | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2020.06.15) | மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், சனாதிபதி சட்டத்தரணி, சட்ட மாஅதிபர் திணைக்களம், கொழும்பு 12 |
| 06 | சட்டத்தரணி திரு அஜித் ரோஹன | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2021.07.21) | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அலுவலகம், தென் மாகாணம் |
| 07 | சட்டத்தரணி திரு அசங்க கரவிட்ட | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2023.04.18) | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர், பயிற்சி மற்றும் உயர் பயிற்சி அலுவலகம், குற்றவியல் அறிக்கைப் பிரிவு, மேட்லன்ட் பிளேஸ், கொழும்பு 07 |
| 08 | திருமதி அசோக அலவத்த | பணிப்பாளர் சபை உறுப்பினர் (2021.07.21) | முன்னாள் அமைச்சின் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 09 | கலாநிதி திருமதி பதித்ரா கொடமுன்னே | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>(2021.07.15 2022.07.28) | சிரேஷ்ட விரிவுரையாளர்<br><br>களனி பல்கலைக் கழகம், களனி |
| 10 | கலாநிதி திரு கபில பண்டார | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>(2020.01.22 2021.07.15) | பீடாதிபதி, கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக் கழகம், கொழும்பு 07 |
| 11 | திரு பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>(2020.10.19) | தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம், கொழும்பு 06 |
| 12 | திரு ஆர்.கே. ஜயலத் | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>(2023.04.08) | பணிப்பாளர், நிதி அமைச்சு, லோடஸ் வீதி, கொழும்பு 01 |
| 13 | திரு நாமல் இந்திக லியனகே | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>(2023.01.26) | ஆணையாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், பத்தரமுல்லை |
| 14 | திரு எம்.எச்.ஜி. பண்டார | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>பிரதிநிதி (சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 40 ஆம் பிரிவின் மூலம் மேற்படி சமவாயத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் பணிக்காக தாபிக்கப்பட்டுள்ள குழுவின் தவிசாளரின் பிரதிநிதி)<br><br>(2020.01.22) | மேலதிக செயலாளர் (நிருவாகம்) சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு, பத்தரமுல்ல |
| 15 | டாக்டர் திரு சேனக குணதிலக்க | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>(2020.01.22 2022.07.28) | முன்னாள் சிறுவர் நோயியல் நிபுணர் |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின்

## 2023 ஆம் ஆண்டுக்கான சபை உறுப்பினர்கள்

| தொடர் இல | சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலஎல்லையும் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01 | திருமதி ஏ.எம்.டி. சுமணசேன | சபை உறுப்பினர் (2020.05.26) | ஆணையாளர், சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு, தொழில் திணைக்களம், கொழும்பு 05 |
| 02 | டாக்டர் திருமதி எச்.எஸ்.ஆர். பெரேரா | சபை உறுப்பினர் (2020.06.19) | பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, கொழும்பு 10 |
| 03 | திரு கே.பி.என். தேவப்பிரிய | சபை உறுப்பினர் (2020.06.11) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல |
| 04 | திருமதி ரோஷினி ஹெட்டிகே | சபை உறுப்பினர் (2020.06.09) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்), நீதி அமைச்சு, கொழும்பு 12 |
| 05 | திருமதி எம்.சீ.எஸ். தேவசுரேந்திர | சபை உறுப்பினர் (2020.05.26) | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)<br>தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, பொல்ஹேன்கொட, கொழும்பு 05 |
| 06 | திருமதி வீ.சீ.டி. சில்வா | சபை உறுப்பினர் (2021.01.22) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 |
| 07 | டாக்டர் லால் பனாபிட்டிய | சபை உறுப்பினர் (2021.03.17) | பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, கொழும்பு 10 |
| 08 | திருமதி ஹசினி பல்லேவெல | சபை உறுப்பினர் (2020.05.20) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), பாதுகாப்பு அமைச்சு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே |
| 09 | திரு எம்.டி.ஜே.சீ. முரகே | சபை உறுப்பினர் (2022.10.13) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (போக்குவரத்து மற்றும் பாராளுமன்ற அலுவல்கள்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல |

## உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தவிசாளரின் மீளாய்வு | 1 – 1 |
| அறிமுகம் | 2 - 3 |
| பிரதான பணிகள் | 3 – 4 |
| 2023 ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு | 4 – 4 |
| 2023 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு | 5 – 5 |
| 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி வெற்றிடங்கள | 5 – 7 |
| நிதிசார் மற்றும் நடவடிக்கைசார் செயலாற்றுகை பகுப்பாய்வு | 7 – 8 |
| **அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2023** | |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் அரச அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் | 8 – 9 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பான சட்டக் கட்டமைப்பை பலப்படுத்தல் | 9 – 11 |
| சிறுவர் துர்நடத்தை பற்றிய குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல் (முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்) | 12 – 12 |
| சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல் | 12 – 13 |
| தேசிய தரவு முறைமையை பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்தல் | 13 – 13 |
| 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை | 13 – 13 |
| சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் | 13 – 17 |
| பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தாபிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சுரெகும் பவ்வ) | 17 – 18 |
| சிரேஷ்ட பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பற்றிய ‘‘மாணவர் தூதுவர்’’ தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 18 – 18 |
| சிரேஷ்ட பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பற்றிய ‘‘மாணவர் தூதுவர்’’ தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 19 – 19 |
| திடீர் / அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கு அவசர நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் | 19 – 19 |
| ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அபாயத்திற்கு ஆளாகக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷபிரயோகங்களுக்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவி அல்லது உரிய வேறு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல். | 19 – 19 |
| சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் | 20 – 20 |
| சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட சகல குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல் | 20 – 20 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பட்டப் பின் மருத்துவக் கற்கை நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 20 – 21 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் பதவியணி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 21 – 21 |
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் தாதி அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 21 - 22 |

| | |
|---|---|
| சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஊடக நடவடிக்கைகள், தகவல்கள், கல்வி மற்றும் தொடர்புசாதன கருவிகள் அபிவிருத்தி, தினங்களைக் கொண்டாடுதல் மற்றும் சம்பவங்கள், கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள், தே.சி.பா.அ.சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம், முகப்புத்தகம், யூரியுப் மற்றும் ரிவிட்டர்( லுழரவுரடிந மற்றும் வறவைவநச) என்பவற்றை பேணிவருவது தொடர்பான தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 22 – 22 |
| விசேட விசாரணை, விசாரணைகளை ஒழுங்குறுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்குறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் நீதிமன்ற செயன்முறைகள் தொடர்பான சைபர் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 23 – 23 |
| சிறுவர்களுக்கு சாதகமான முறையில் வீடியோ வாக்குமூலங்களை ஒளிப்பதிவு செய்யும் அலகுகளை தாபித்தல், பேணிவருதல் மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல். | 23 – 24 |
| தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை | 24 – 24 |
| சிறுவர் துஷ்பிரயோக மீட்புப் பாடவிதானம் | 25 – 25 |
| விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 25 – 25 |
| புலம்பெயர் ஊழியர்களின் சிறுவர்கள் சகல வகையிலுமான வன்முறைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யும் ‘‘குடும்ப சந்திப்பு’’ தொழில்நுட்பக் கருவியை அறிமுகம் செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 25 – 25 |
| கரையோர வலயங்களை சூழவுள்ள கிராமங்களில் வாழும் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலை கட்டியெழுப்புவதற்காக அமுல்படுத்தப்படுகின்ற விசேட நிகழ்ச்சித்திட்டம் | 26 – 26 |
| தோட்டத்துறையை மையமாகக் கொண்டு வாழும் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலை கட்டியெழுப்புவதற்காக அமுல்படுத்தப்படுகின்ற விசேட நிகழ்ச்சித்திட்டம் | 26 – 26 |
| சமயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் | 27 – 27 |
| பிரதேச மட்டத்தில் சமுதாயத்தில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 27 - 27 |
| விசேட பொலிஸ் புலனாய்வுகள | 27 - 28 |
| புகைப்படங்களின் தொகுப்பு | 29 – 31 |
| வருடாந்த கணக்குகள் | 32 – 49 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 50 - 56 |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தவிசாளரின் மீளாய்வு**

சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான தேசிய கொள்கையை தயார் செய்யும் பணிக்கு மற்றும் சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்கு 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 ஆம் பிரிவுக்கு அமைய அதிகாரசபைக்கு உரித்தான பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் (அ) பிரிவின் பிரகாரம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை 2019 ஆம் ஆண்டு தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது. சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான ஐந்து வருட செயற்றிட்டத்தை தயார் செய்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பான சட்டக் கட்டமைப்பை பலப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டு சிறுவர் பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்தல் மற்றும் சிறுவர் உடல்சார் தண்டனை தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்ய அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாலியல் துஷ்பிரயோகம் காரணமாக கர்ப்பமடைகின்ற சிறுமியருக்கு மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் மேற்படி கர்ப்பத்தை நிறைவு செய்தல், பொதுப் போக்குவரத்து சேவைகளை பேணிவருகின்ற அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டல் உள்ளதா என்பது பற்றி ஆராய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல், சிறுவர் துஷ்பிரயோகத் தவறுகளுக்கு குற்றவாளியான ஆட்கள் சிறுவர்களுடன் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகம் செய்வது தொடர்பாக ஆரம்பப் பணிகளை மேற்கொள்ளல் போன்ற பணிகள் வழிப்படுத்தப்பட்டன.
2023 ஆம் ஆண்டிலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடுகள் சகிதம் மற்றும் ஏற்பாடுகள் இன்றி நடாத்தப்பட்டன. மேலும் சிறுவர் துஷ்பிரயோகங்களின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தத் தேவையான தலையீடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

2023 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 12 நடாத்தப்பட்டன. பொதுவாக நோக்கும் போது 2023 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு செயலாற்றுகையை அடைந்துகொள்ள இயலுமாயிற்று என்பதைக் குறிப்பிட முடியும். இதற்கு பணிப்பாளர் சபை, நேர்வரிசை அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பதவியணியினரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பை மிக்க உயர்வாக மதிக்கின்றேன்.

உதயகுமார அமரசிங்க
தவிசாளர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## அறிமுகம்

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி "ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்" உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் சமவாயத்தை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் மேற்படி காலப் பகுதியில் காணப்பட்ட சமூக நிலைமைகளை ஆராயும் போது, சிறுவர் ஆட்கடத்தல், சிறுவர் விபச்சாரத் தொழில், சிறுவர் ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் சர்வதேச ரீதியில் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் ஆட்கடத்தில் அதிகரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஆயுத மோதல்களின் போது சிறுவர்களை பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதை சர்வதேச குற்றச் செயலாக கருதுவதும் இனங்காணப்பட்டது. இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தி 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1990 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. 1991 யூலை மாதம் 12 ஆம் திகதி இது நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பித்தது. அதற்கமைய 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. 1990 யூன் மாதம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டதை அடுத்து அதிகாரசபை இயங்க ஆரம்பித்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள்சமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும் போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவது படிப்படியாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான பணியொன்றான ''சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை''க்கு 2019.10.29 ஆம் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்தத் தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான குறித்த ஐந்து வருட திட்டமும் தயார் செய்து முடிக்கப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புக்காக 2022 ஆம் ஆண்டிலும் தேசிய செயற்றிட்டங்களுக்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டுள்ளது.

## பிரதான செயற்பணி

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்பணி பின்வருமாறாகும். (14 ஆம் பிரிவுக்கு அமைய)

(அ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

(ஆ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(இ) அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஈ) துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

(உ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளல்.

(ஊ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

(எ) சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

(ஏ) சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குறுத்தல்.

(ஐ) ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதும்.

(ஒ) குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஓ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

(ஔ) சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

(க) சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

(ங) சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

(ச) சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும், மேம்படுத்துவதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.


(ஞ) சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

(ட) சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

(ண) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.

(த) சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

**2023 ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு**



## 2023 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1. தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் அலுவலகம்
2. பணிப்பாளர் நாயகம் அலுவலகம்
3. நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
4. நிதிப் பிரிவு
5. திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
    - 5.1 திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலகு
    - 5.2 தகவல் மற்றும் ஊடக அலகு
    - நூலகம்
6. நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
7. உளவியல் சமூக பிரிவு
8. சட்டப் பிரிவு
9. சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
    - 9.1 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை
    - 9.2 மத்திய ஆவணக்காப்பகம்
    - 9.3 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு
        - 9.3.1 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு - ராகம
        - 9.3.2 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு - கராபிட்டிய
    - 9.4 இணையத்தளக் கண்காணிப்பு பிரிவு
    - 9.5 விசாரணை பிரிவு
10. உள்ளகக் கணக்காய்வு பிரிவு
11. விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

## 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி வெற்றிடங்கள்


| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - | 01 |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | 01 | - |
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - | 01 |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | - | 01 |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 | - |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | 01 | - |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 11 | உதவி பணிப்பாளர் - சட்டம் | MM -1-1 | 01 | - | 01 |
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் (அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்) | MM - 1-1 | 01 | 01 | - |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 | - |
| 14 | உதவி பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் | MM -1-1 | 01 | 01 | - |
| 15 | உதவி பணிப்பாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 16 | உதவி பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | 01 | - |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 02 | 01 | 01 |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 27 | வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 28 | உளவியல் சமூக அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 29 | சைபர் குற்றச்செயல் பகுப்பாய்வாளர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 30 | சைபர் கண்காணிப்பு அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 31 | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 32 | சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர் | MA - 4 | 01 | - | 01 |
| 33 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - | 01 |
| 34 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - | 01 |
| 35 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 18 | 07 |
| 36 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 14 | 11 |
| 37 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 369 | 218 | 150 |
| 38 | பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 01 | - | 01 |
| 39 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 40 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 41 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 42 | நூலகர் | MA - 3 | 01 | - | 01 |
| 43 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | - | 01 |
| 44 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 45 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 06 | 02 | 04 |
| 46 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 15 | 04 | 11 |
| 47 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 48 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 10 | 02 | 08 |
| 49 | இணையத்தள கண்காணிப்பு உதவியாளர் | MA - 3 | 02 | 01 | 01 |
| 50 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 51 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 10 | 02 | 08 |
| 52 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 | 10 | 05 |
| 53 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 | 01 | 01 |
| 54 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 | 15 | 17 |
| 55 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) தட்டெழுத்து அலுவல்கள் (சிங்களம்) | MA – 1-1 | 10 | 02 | 08 |
| 56 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) தட்டெழுத்து அலுவல்கள் (தமிழ்) | MA – 1-1 | 10 | 02 | 08 |
| 57 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) செவ்வைபார்த்தல் (சிங்களம்) | MA – 1-1 | 10 | 02 | 08 |
| 58 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) செவ்வைபார்த்தல் (தமிழ்) | MA – 1-1 | 10 | - | 10 |
| 59 | சாரதி | PL 3 | 07 | 04 | 03 |
| 60 | செய்தி கொண்டு செல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | 01 | - |
| 61 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 03 | - |
| 62 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 | 01 |
| **மொத்தம்** | | | **618** | **331** | **287** |

**நிதிசார் மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை பகுப்பாய்வு**

2023 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயலாற்றுகையானது மூன்று செயற்றிட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டன. 2023 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூபா மில்லியன் 40 ஆகும்.






## அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2023

**சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் அரச அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்.**

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாவட்ட மட்டத்தில் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் சிறுவர் அலுவல் வெளிக்கள அலுவலர்களுக்கு கூட்டு அணுகுமுறைகளை மேம்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் போது முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர்கள், நன்னடத்தை அலுவலர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்கள், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் ஆலோசனை அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்படுகின்றார்கள். 2023 ஆம் ஆண்டில் 25 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதில் பங்குபற்றிய பயனாளிகளின் எண்ணிக்கை 1218 பேர் ஆவார்கள். வளவாளர் குழாமிலுள்ள அலுவலர்களுக்காக 02 செயலமர்வுகள் ஒன்லையின் மூலம் நடாத்தப்பட்டது. இதில் அலுவலர்கள் 172 பேர் பங்குபற்றினார்கள்.

மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களினால் சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடுகள் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் பங்குபற்றிய மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 703 பேர் ஆவார்கள்.

ஏற்பாடுகள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | பதுளை | மொனராகலை | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | குருநாகல் | கண்டி | மாத்தளை | நுவரெலியா | அநுராதபுரம் | பொலன்னறுவை | கேகாலை | இரத்தினபுரி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சி த்திட்டம் | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 49 | 45 | 45 | 45 | 92 | 54 | 55 | 57 | 45 | 50 | 61 | 45 | 56 | 60 | 65 | 50 | 50 | 33 | 50 | 54 | 39 | 25 | 40 | 25 | 28 |

ஏற்பாடுகள் இன்றி நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டம் | கம்பஹா | காலி | மாத்தறை | மட்டக்களப்பு | ண்டி | அநுராதபுரம் | கேகாலை | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்தி ட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 03 | 02 | 01 | 01 | 02 | 01 |
| யனாளிகளின் எண்ணிக்கை | 45 | 150 | 175 | 65 | 19 | 43 | 121 | 85 |

**சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பான சட்டக் கட்டமைப்பை பலப்படுத்தல்**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ஊ) பிரிவுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான தேசிய கொள்கையை விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்தத் தேவையான சட்ட ரீதியான, நிருவாக ரீதியான அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்வதன் மூலம் காலத்திற்கு இசைவாக சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது இதன் அடிப்படை நோக்கமாகும்.

நீதிமன்ற கட்டளைக்கு அமைய மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய மற்றும் சிறுவர் பாதுகாப்பு தெடர்பிலான காலத்தின் தேவைக்கு அமைய மேற்படி சட்ட, நிருவாக மற்றும் வேறு திருத்தங்கள் அவசியமாகின்ற துறைகளை இனங்காண்பது மேற்கொள்ளப்பட்டது.

திருத்தங்களை சிபாரிசு செய்வதற்கு சிறுவர் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயத்துறைகளைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய கல்விமான்கள் குழு நியமனம் செய்யப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டில் சட்ட, நிருவாக மற்றும் வேறு திருத்தங்கள் தொடர்பில் இயங்கிவந்த குழுக்கள் விடயத்துறைகளுக்கு அமைய பின்வருமாறாகும்.

2023 ஆம் ஆண்டில் சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பாக செயற்பட்டு வந்த குழுக்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| **தொடர் இல.** | **குழுவின் விடயம்** | **மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்** |
|---|---|---|
| 01 | பராயமடையாத சிறுவர்களுக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை ஆற்றுவது பற்றிய சட்டரீதியான நிலைமை – களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவு | பணிப்பாளர் சபையினால் நியமனம் செய்யப்பட்ட துணைக்குழு ஒன்றுகூடி கலந்துரையாடியதுடன், சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிடர் நாயகத்தினால் இந்த விடயம் தொடர்பாக அதிகாரசபையின் நிலைப்பாடு களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது. |
| 02 | சுற்றுலாத் துறை மற்றும் சிறுவர் பாதுகாப்பு | சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சுற்றுப்பயணம் மற்றும் சுற்றுலாத்துறையைச் சேர்ந்த தரப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்காக அரச, சுற்றுப்பயண மற்றும் சுற்றுலாத்துறையைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தனித்தனியாக மற்றும் கூட்டாக கலந்துரையாடப்பட்டது. பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதும் மேற்கொள்ளப்பட்டது. |
| 03 | சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு குற்றவாளியான ஆட்கள் சிறுவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்வதை தடுப்பதற்கான முறையியல்களை அறிமுகம் செய்தல். | 230 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது 2023.09.21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய குறித்த நிறுவனங்களிடமிருந்து வேட்புமனுக்கள் கோரப்பட்டன. சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு குற்றவாளியான ஆட்கள் சிறுவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்வதைத் தடுப்பதற்கான முறையியல்களை அறிமுகம் செய்யும் குழு ஒன்றுகூடி மேற்படி விடயம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது. |
| 04 | ஆள்அடையாளத்தை வெளிப்படுத்தாது கைவிட்டுச் சென்றுள்ள சிசுக்களை பாதுகாப்பாக பொறுப்பேற்றுக் கொள்ளும் முறையியலுக்கான சட்டம் | சட்ட துணைக்குழு குறித்த விடயம் தொடர்பில் நீண்டநேரம் ஆராய்ந்தது. தண்டனைச் சட்டக்கோவையின் 308 ஆம் பிரிவை திருத்தம் செய்யாது, அமுலில் உள்ள சட்ட ரீதியான சட்டகத்திற்குள் சிசுக்களை பொறுப்பேற்றுக் கொள்ளும் கருமபீடங்களை தாபிக்க முடியும் என்ற சிபாரிசு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது. |
| 05 | உடல்சார் தண்டனைச் சட்டத்தை திருத்தம் செய்தல் | உடல்சார் தண்டனை தொடர்பான சட்டத் திருத்தக் குழு வரைவு செய்துள்ள சட்டம் சிறுவர் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு கருத்துக்கள் மற்றும் பிரேரணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. சட்டத் திருத்தத்தை அமைச்சரவையிடம் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் |

| | | |
|---|---|---|
| | | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 06 | கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு சட்டத்தை தயார் செய்தல் | கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்புக்கான புதிய சட்டங்களை திருத்தம் செய்வது தொடர்பான பொழிப்புரையாக்கப்பட்ட எண்ணக்கருப் பத்திரம் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவை விஞ்ஞாபனம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிடம் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 07 | பொதுப் போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தி தனியாக பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகள் | போக்குவரத்து சேவைகளை ஆற்றுகின்ற அரச நிறுவனங்களின் முகவர்கள் வரவழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஒவ்வொரு அரச நிறுவனத்தினதும் பங்களிப்பு இனங்காணப்பட்டது. விடயம் சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் இனங்காணப்பட்டது. களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்திடம் அதிகாரசபையின் நிலைப்பாடு அறிக்கையிடப்பட்டது. |
| 08 | சிறுவர்களான பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் கர்ப்பத்தை நிறைவு செய்வதற்கு அங்கீகாரம் | சிறுவர்களான பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் கர்ப்பத்தை நிறைவு செய்வதற்கு 2016 டிசம்பர் மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய போதிலும் உரிய சட்டங்கள் திருத்தம் செய்யப்படாத விடயம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. |
| 09 | சிறுவர் துஷ்பிரயோக வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பான பிரேரணைகளை சமர்ப்பித்தல் | 232 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது 2023.11.23 ஆம் திகதி மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய சிறுவர் துஷ்பிரயோக வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பிலான பிரேரணைகளை சமர்ப்பிக்கும் குழுவுக்கு உரிய நிறுவனங்களிடம் ஆட்களை பெயரிடுமாறு கேரிக்கை விடுக்கப்பட்டது. |
| 10 | சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கூட்டுச் சட்டமொன்றை தயார் செய்தல் | சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கூட்டுச் சட்டமொன்றை தயார் செய்வது பற்றிய குழுவின் இரண்டாவது கூட்டத்தொடர் நடாத்தப்பட்டது. குழு உறுப்பினர்கள் கூட்டுச் சட்டத்திற்கான பிரேரணை சிபாரிசுகளை வழங்கியுள்ளது. சகல தகவல்களும் தொகுக்கப்பட்டு சட்டத்தின் குறைபாடுகள் மற்றும் திருத்தங்களுக்கான பிரேரணைகளை உள்ளடக்கிய ஆவணம் தயார் செய்யப்பட்டது. அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக ஆவணம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிடம் பொறுப்பளிக்கப்பட்டது. |

**சிறுவர் துர்நடத்தை பற்றிய குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல் (முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்)**

சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட வழக்குகளை ஒழுங்குறுத்தும் நடவடிக்கைகள், அதிகாரசபை சட்டத்தின் 14(க) பிரிவின் கீழ் அதிகாரசபைக்கு கிடைத்துள்ளதுடன், சட்டப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற அது சம்பந்தமான முறைப்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாட்டின் வழக்கு விசாரணை தாமதமடைவதை தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட சாட்சியாளர்களுக்கு உதவி மற்றும் அரவணைப்பைச செய்துகொடுத்தல் (நீதிமன்றத்தில் / பாடசாலையில் / வீட்டில்), சட்ட மாஅதிபரின் ஆலொசனையை துரிதப்படுத்தல், விசாரணைக்கு ஏற்புடையதாகின்ற ஆவணங்களை சேகரிக்க உதவுதல், சட்டத்தரணி உதவி / சட்ட ஆலோசனை வழங்குதல் போன்ற அனைத்தும் இந்த ஒழுங்குறுத்தலில் உள்ளடங்கும். முறைப்பாடொன்றாக கிடைக்கின்ற தகவல்களை மையமாகக் கொண்டு சிறுவர் துஷ்பிரயோக வழங்கு விசாரணைகளை துரிதப்படுவதன் மூலம் ஒழுங்குறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிறுவர் துஷ்பிரயோக வழக்கு நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தலாக 14 (ஏ) தத்துவமுள்ளதாக்குவதற்கு 2023 இல் சட்டப் பிரிவு 40 முறைப்பாடுகள் தொடர்பாக தலையீடு செய்தமை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒரு வழக்கு தொடர்பில் ஏற்புடையதாகின்ற ஒழுங்குறுத்தல்கள் சில பின்பற்றப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.)

| | | |
|---|---|---|
| 01. | நீதிமன்ற மருத்துவ அறிக்கைகள் | 02 |
| 02. | பொலிஸ் ஒருங்கிணைப்பு | 03 |
| 03. | சட்ட மாஅதிபர் ஒருங்கிணைப்பு | 19 |
| 04. | பாதிக்கப்பட்டோருக்கான அரவணைப்பு | 04 |
| 05. | கல்வி உதவி | 08 |
| 06. | உரிமைகளுக்கான தலையீடு | 03 |
| 07. | பாதிக்கப்பட்டோருக்கான உதவி | 08 |
| 08. | உளவுத் தகவல்கள் | 01 |

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் விசாரணை அலகினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றவியல் விசாரணைகளின் பிரித்தெடுக்கப்பட்ட கோப்புக்கள் தொடர்பில் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கோப்புகளைப் பரிசோதித்தல்கள் (ஒழுங்குறுத்தல்) – 2023 ஆம் ஆண்டில் பிரித்தெடுக்கப்பட்ட கோப்புக்கள் 18.

**சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல்.**

பாதுகாப்பான, அன்பான சூழலில் சிறுவர்களின் முழுமையான அபிவிருத்திக்கு உதவுகின்ற மற்றும் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுகின்ற பெற்றோர் /குடும்பங்களுக்கு தமது சிறுவர்கள் பாதுகாப்பாக உள்ளார்கள் என்ற உணர்வைப் பெற்றுக்கொடுக்கின்ற, சமூக நியாயமான மற்றும் விலை தாங்கிக் கொள்ளக்கூடியதான உயர் தரத்தைக் கொண்ட அரவணைப்பைப பெற்றுக் கொடுப்பதற்காக சிறுவர் பகல்நேர பாதுகாப்பு அரவணைப்பு நிலையங்களின் வசதிகளை விஸ்தரிப்பதற்கு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் அவற்றை ஒழுங்குறுத்துவதை இலக்காகக் கொண்டு சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்கள் பற்றிய தேசிய கொள்கை தயார் செய்யப்படுகின்றது. இதன் மூலம் அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ள நோக்கங்கள் பின்வருமாறாகும்,

1. தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுகின்ற பெற்றோர் /குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலைய வசதிகளுக்கு நியாயமான பிரவேசத்தை விஸ்தரித்தல்.
2. சிறுவர்கள் தமது உச்சளவான ஆற்றல்களை அடைந்துகொள்வதை உறுதி செய்வதற்காக உயர் தரத்தைக் கொண்ட சிறுவர் பகல்நேர அரவணைப்பு சேவைகளை வழங்குவதற்கு வசதிகளை செய்துகொடுத்தல்.
3. வலது குறைந்த சிறுவர்களுக்கு உயர் தரத்தைக் கொண்ட சிறுவர் பகல்நேர அரவணைப்பு வசதிகளை விஸ்தரித்தல்.

4. சிறுவர் பகல்நேர அரவணைப்பு வசதிகள் முகாமைத்துவத்தின் விளைதிறனை மேம்படுத்தல்.
5. வினைத்திறன்மிக்க கட்டுப்பாடு மற்றும் வகைப்பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக அமுல்படுத்தும் பணிகளின் சட்டகத்தை அறிமுகம் செய்தல்.

கொள்கையை வரைவு செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நேர்வரிசை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

### தேசிய தரவு முறைமையை பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்தல்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(க) பிரிவுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவு முறைமையை தயார் செய்தல் மற்றும் பேணிவருவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணியாகும். இதற்கமைய இந்தத் தரவு முறைமையை தயார் செய்யத் தேவையான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 03 கட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்கு ஆரம்பத் திட்டம் தயார் செய்யப்பட்டது. தேசிய தரவு முறைமைக்கு தகவல் தொழில்நுட்ப கல்விமான்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பல்தரப்பு அணுகுமுறையின் ஊடாக கிடைக்கின்ற தரவுகளை உட்புகுத்துவதை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தத் தரவு முகாமைத்துவ முறைமை எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும் என்பது பற்றி உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படல் வேண்டும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்காக தரவு முறைமை பேணிவரப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளை வழிப்படுத்துவதற்குள்ள தரவு முறைமையை இற்றைப்படுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது.

### 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் உடல்சார், உளவியல், பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் பாரபட்சம் காட்டல், சைபர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வது 24 மணி நேரம் முழுவதிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தத் தொலைபேசிச் சேவை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இயங்கிவருகின்றது. 2023 ஆம் ஆண்டு 1929 சிறுவர் உதவித் தொலைபேசி சேவைக்கு 8469 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவைக்கு 118,993 அழைப்புக்கள் கிடைத்துள்ளன.


### சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள்

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பல்வேறு விதமாகக் கிடைக்கின்றன. மேற்படி முறைகள் பின்வருமாறாகும்.

**01.** 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
**02.** அதிகாரசபைக்கு நேரடியாக வருகைதந்து சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள்.
**03.** கடிதங்கள், பெக்ஸ் மின்னஞ்சல் மூலம் கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
**04.** சைபர் கண்காணிப்பு மூலம் கிடைக்கின்ற தகவல்கள்.
**05.** மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
**06.** வெகுசன ஊடகம் அல்லது சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள்.

இவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகள் அனைத்துக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், முறைப்பாட்டின் தன்மைக்கமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ள ஒட்டுமொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 9436 ஆகும்.






## தவறின் தன்மைக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் வகைப்படுத்தல்


| தொடர் இல. | தவறின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிறுவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆபாச வெளியீடுகள் - 286 (அ) த.ச.கே. | 06 |
| 02 | தமது கட்டுப்பாட்டின் கீழ் ஒரு வளவில் மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகத்தை அறிவிக்காமை - 286 (இ) த.ச.கோ. | 01 |
| 03 | சிறுவர்களை பிச்சை எடுக்கச் செய்தல் - 288 த.ச.கோ. | 323 |
| 04 | பாலியல் புணர்ச்சிக்கு ஆட்கடத்தப்பட்ட ஒருவராக செயற்படுவதற்கு சிறுவர்களை வாடகைக்குப் பெறல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல் - 288(அ) த.ச.கோ. | 09 |
| 05 | மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை கடத்தலுக்கு பிள்ளைகளை வாடகைக்குப் பெறல் - 288(ஆ) த.ச.கே. | 27 |
| 06 | பிள்ளைகளுக்கு எதிரான குரூரத்தன்மை - 308 (அ) த.ச.கோ. | 2238 |
| 07 | காயம் ஏற்படுத்தல் - 310 த.ச.கோ. | 166 |
| 08 | கடும் காயம் ஏற்படுத்தல் - 311 த.ச.கோ. | 266 |
| 09 | பாலியல் துன்புறுத்தல் - 345 த.ச.கோ. | 469 |
| 10 | இலங்கைக்கு வெளியே கடத்திச் செல்லல் - 351 த.ச.கோ. | 04 |

| | | |
|---|---|---|
| 11 | சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்து அகற்றல்- 352.த.ச.கே. | 58 |
| 12 | கடத்திச் செல்லல் - 353 த.ச.கோ. | 217 |
| 13 | கடும் காயம் ஏற்படுத்துவற்காக கடத்தல் - 356 த.ச.கோ. | 11 |
| 14 | கடன் பிணை ஊழியம் அல்லது கட்டாய வேலை பெறல் - 358 (அ) த.ச.கோ. | 04 |
| 15 | கடத்தல்காரராக பிள்ளைகளை ஈடுபடுத்தல் - 360 (அ) த.ச.கோ. | 20 |
| 16 | சிறுவர்களிடமிருந்து முறையற்ற பாலியல் பயன்களை பெறுதல் - 360 (ஆ) த.ச.கோ. | 08 |
| 17 | சிறுவர்களை வியாபாரம் செய்தல்- 360 (இ)த.ச.கோ. | 32 |
| 18 | மகவேற்பு தொடர்பான தவறுகள் - 360(ஈ) த.ச.கோ. | 03 |
| 19 | பாலியல் துஷ்பிரயோகத்திற்காக ஒரு பிள்ளையை வற்புறுத்தல் த.ச.கோ. | 01 |
| 20 | வன்புணர்தல்- 363 த.ச.கே. | 50 |
| 21 | முறைதகாப் புணர்ச்சி - 364 (அ) த.ச.கே. | 07 |
| 22 | இயற்கைக்கு முரணான பாலியல் செயற்பாடுகள் - 365(அ) த.ச.கோ. | 01 |
| 23 | கடும் பாலியல் துஷ்பிரயோகம்- 365 (ஆ) த.ச.கே. | 403 |
| 24 | இயற்கைக்கு முரணான தவறுகள்- 365 (அ) த.ச.கே. | 0 |
| 25 | தவறுகள் தொடர்பிலான வெளியீடுகள் 365 (இ) த.ச.கோ. | 04 |
| 26 | சிறுவர் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டம் | 2932 |
| 27 | சிறுவர் ஊழியம் - 56 இன் 47 ஆம் இலக்க சட்டம் | 181 |
| 28 | குடும்ப வன்முறை – 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை சட்டம் | 46 |
| 29 | சிறுவர் தவறாளிகள் | 310 |
| 30 | கட்டாயக் கல்வி – 1939 கல்விக் கட்டளைச் சட்டம் | 1922 |
| 31 | கருக் கலைப்பு | 03 |
| 32 | தற்கொலை செய்துகொள்வதற்கு முயற்சித்தல் | 25 |
| 33 | சிறுவர் விவாகம் | 39 |
| 34 | இணையத்தள துன்புறுத்தல் (நிருவாண புகைப்படங்களைப் பயன்படுத்தி அச்சுறுத்தல்) | 150 |
| 35 | ஆலோசனை / உளவியல் - சமூக உதவி தேவையான சிறுவர்கள் | 454 |
| 36 | சிறுவர்களுக்கான பிரவேசம் | 02 |
| 37 | போதைவஸ்துக் காரணமாக இடம்பெறுகின்ற துர்நடத்தை | 125 |
| 38 | நிதிசார் அல்லது வேறு காரணங்களின் பேரில் பாடசாலைக்கு அனுப்ப முடியாமை | 10 |
| 39 | 2 வயதுக்குக் குறைவான பிள்ளைகளை விட்டுவிட்டு தாய் வெளிநாடு செல்லல் | 03 |
| 40 | பிள்ளைகளின் நடத்தை பற்றிய சிக்கல்கள் | 26 |
| 41 | பிள்ளைகளின் வன்முறைமிக்க நடத்தை பற்றிய சிக்கல்கள் | 27 |


| | | |
|---|---|---|
| 42 | ஒன்லையின் கல்வி சம்பந்தமான சிக்கல்கள் | 01 |
| 43 | கல்வி உதவிக்கான கோரிக்கைகள் | 13 |
| 44 | இளம்பிராயத்தில் கர்ப்பமடைதல் | 53 |
| 45 | பிறப்புச் சான்றிதழ் இல்லாமை | 37 |
| 46 | பாடசாலை செல்வதை நிராகரித்தல் | 06 |
| 47 | பொலிஸ் தாக்குதல் மற்றும் கைதுசெய்தல் | 03 |
| 48 | வேறு | 691 |
| | ***மொத்தம்*** | **11387** |






❖ **மேலுள்ள வரைபடம் மூலம் சிறுவர்கள் 05 பேர் 19 வயதுக்கு மேற்பட்டவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான காரணம் 18 வயதுக்குக் குறைவான காலப்பகுதியில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பெற்றுக் கொண்ட முறைப்பாடு காரணமாகவாகும்.**




**பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தாபிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சுரெகும் பவ்வ)**

சிறுவர்களுக்கு சிறுவர் நட்புறவு சூழலை பாடசாலைகளில் உருவாக்குதல், கட்டாயக் கல்வி உரிமையை உறுதி செய்தல் மற்றும் சிறுவர்களை சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து தடுத்துக் கொள்ளத் தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பாடசாலைகளில் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தாபிப்பதன் நோக்கமாகும். இதன் போது 2011 இன் 17 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய கல்வி அமைச்சுடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது. 2023 இல் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை மேம்படுத்துவதற்காக முனைப்புடன் செயற்படுகின்ற குழுக்கள் உள்ள பாடசாலைகளை பாராட்டுவதற்கு திட்டமிடப்பட்டது. இதற்கு 986 பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் 783 பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. பயனாளிகளின் எண்ணிக்கை 61,590 பேர் ஆவார்கள்.

| மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | பதுளை | மொனராகலை | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | குருநாகல் | கண்டி | மாத்தளை | நுவரெலியா | அநுராதபுரம் | பொலன்னறுவை | கேகாலை | இரத்தினபுரி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் எண்ணிக்கை | 26 | 67 | 34 | 19 | 29 | 32 | 06 | 12 | 19 | 44 | 47 | 06 | 87 | 51 | 53 | 17 | 27 | 13 | 32 | 25 | 97 | 02 | 12 | 12 | 14 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 2983 | 3655 | 2628 | 1493 | 2260 | 3286 | 248 | 661 | 1394 | 5630 | 2554 | 532 | 6450 | 3458 | 3264 | 587 | 2019 | 960 | 3609 | 1607 | 6892 | 922 | 2574 | 1022 | 902 |

**சிரேஷ்ட பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பற்றிய "மாணவர் தூதுவர்" தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, கல்வி அமைச்சுடன் இணைந்து, சிரேஷ்ட மாணவர் தலைவர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு ரீதியாக அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாடசாலைகளில் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கு மாணவர் தலைவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பாடசாலை சமுதாயத்தினரை சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதும் இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் 532பாடசாலைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்துள்ளன. அலுவலர்களுக்காக ஒன்லையின் முறையில் 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. 24 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மாவட்ட மாணவர் தூதுவர் மாநாடுகள் 09 நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 1500 பேர் ஆவார்கள்.

| மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | பதுளை | மொனராகலை | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | குருநாகல் | கண்டி | மாத்தளை | நுவரெலியா | அநுராதபுரம் | பொலன்னறுவை | கேகாலை | இரத்தினபுரி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை | 33 | 31 | 21 | 21 | 14 | 10 | 24 | 07 | 44 | 18 | 63 | 17 | 39 | 55 | 17 | 13 | 34 | 04 | 23 | 26 | 07 | 02 | 03 | 04 | 02 |

**பல்கலைக் கழக மாணவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பற்றிய "பல்கலைக் கழக மாணவர் தூதுவர்" தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

பல்கலைக் கழக மாணவர்களின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்வது இதன் நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டில் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கு அமைய 17 அரச பல்கலைக் கழகங்களுக்கான மைய ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். 17 பல்கலைக் கழகங்களையும் சேர்ந்த 2265 பேர் பதிவு செய்துள்ளார்கள். விழிப்புணர்வூட்டும் 07 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தப் பல்கலைக் கழகங்களின் மாணவர்கள் தொண்டர் அடிப்படையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் பாடசாலை மாணவர் தூதுவர் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்கள்.

| பல்கலைக் கழகம் | கொழும்பு | களனி | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | கொத்தலாவல | மொரட்டுவை | கம்பஹா விக்ரமாரச்சி | திறந்த பல்கலைக் கழகம் | பேராதனை | ருஹுணு | யாழ்ப்பாணம் | வவுனியா | வடமேல் | கிழக்கு | தென்கிழக்கு | ரஜரட்டை | ஊவா வெல்லஸ்ஸ | சபரகமுவா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்துள்ள பல்கலைக் கழக மாணவர்களின் எண்ணிக்கை | 102 | 197 | 130 | 23 | 9 | 22 | 8 | 107 | 42 | 346 | 34 | 251 | 231 | 604 | 92 | 43 | 24 |

**திடீர் / அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கு அவசர நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

திடீர் /அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் சிறுவர்களின், சிறுவர் பாதுகாப்பு மற்றும் நல்ல நிலைத்திருத்தலை உறுதி செய்வதற்கான தகுந்த சிறுவர் பாதுகாப்பு தேவைகளைப் பூர்த்தி செய்வது இதன் முக்கிய நோக்கமாகும். மேலும் சிறுவர்களுக்கு அவசர நிவாரணங்களை செய்துகொடுப்பதும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒரு மாவட்டத்திற்கு ரூபா 750000 வீதம் 25 மாவட்டங்களுக்கும் நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

**ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அபாயத்திற்கு ஆளாகக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷபிரயோகங்களுக்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவி அல்லது உரிய வேறு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு முறைப்பாட்டு இலக்கத்தைக் கொண்டதாக அறிக்கையிடப்படுகின்ற முறைப்பாடுகளிலிருந்து இனங்காணப்படுகின்ற கல்வி உதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, பாதுகாப்பற்ற, அச்சுறுத்தல் நிலையிலுள்ள சிறுவர்களின் கல்வி உரிமைகளை பாதுகாப்பதற்கு உதவி வழங்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் கீழ் 2023 ஆம் ஆண்டில் 685 பேருக்கு கல்வி உதவி வழங்கப்பட்டது. இதற்காக ரூபா 3208000 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது.

## சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் (14) (க) பிரிவுக்கமைய சிறுவர்களுக்கு சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்கும் சகல சமய மற்றும் அறக்கட்டளை நிலையங்களையும் கண்காணிப்புச் செய்வதும் ஒழுங்குறுத்துவதும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள் மற்றும் பிரதேச அலுவலர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் பதவியணியினருக்காக சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் சுமார் 313 நடாத்தப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் 306 தொடர்பில் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் செய்யப்பட்டது.

| மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | பதுளை | மொனராகலை | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | குருநாகல் | கண்டி | மாத்தளை | நுவரெலியா | அநுராதபுரம் | பொலன்னறுவை | கேகாலை | இரத்தினபுரி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை | 41 | 21 | 42 | 10 | 05 | 03 | 07 | 04 | 13 | 30 | 08 | 18 | 18 | 16 | 08 | 08 | 05 | 02 | 06 | 08 | 10 | 09 | 03 | 06 | 05 |

## சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட சகல குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல்

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் (14) (ஏ) பிரிவுக்கமைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சகல விசாரணைகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல் எனும் பிரிவு பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உச்சளவான நலனை அடைந்துகொள்ளும் நோக்கத்தை தத்துவமுள்ளதாக்கி சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட சகல குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்துவது மேற்கொள்ளப்படுகின்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் வழக்குகளை ஒழுங்குறுத்தல் முறையியலாக பதிலளிக்கத்தக்க ஒழுங்குறுத்தல் முறையியல் கடந்த ஆண்டில் பயன்படுத்தப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டு முதல் பதிலளிக்கத்தக மற்றும் முற்போக்கு வழக்கு ஒழுங்குறுத்தல் முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய மேல் நீதிமன்றங்களில் காணப்பகின்ற சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பாக பொலிஸ் பிரிவு மட்டத்தில் தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்களை தரவு முறையில் தரவேற்றம் செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் முதற் கட்டமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் நாடு முழுவதிலும் மேல் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு வருகின்ற சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் 648 தொடர்பான முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தும் செயன்முறையை முன்னெடுப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பட்டப் பின் மருத்துவக் கற்கை நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பாக மற்றும் அவற்றைத் தடுப்பது தொடர்பில் பல்வேறு தலையீடுகளை மேற்கொள்ளும் விடயத்தில் மருத்துவர்கள் பாரியதொரு செயற்பணியை நிறைவேற்றி வருகின்றார்கள். மேற்படி செயற்பணியை மென்மேலும் பலப்படுத்துவதற்காக மருத்துவர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை மேம்படுத்தும்

பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியது. 2023 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக பட்டப் பின் படிப்பு மருத்துவக் கற்கை நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்கள் முப்பது (30) பேருக்காக விழிப்புணர்வூட்டும் 2 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் மற்றும் பதவியணி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அறிவு மற்றும் உணர்வுப்பூர்வமான ஆசிரியர் சமுதாயம் மற்றும் பதவியணியை உருவாக்குவதன் மூலம் சிறுவர்களுக்கு சாதகமான சூழலில் கல்வி பயிலும் பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியுடன் இருக்கின்ற சிறுவர் பரம்பரையை உருவாக்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டில் 09 தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 09 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட்டன. இதன் மூலம் விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 2790 பேர் ஆவார்கள்.

| தேசிய கல்வியியற் கல்லூரி | புலதிசி தே.க.க.க. பொலன்னறுவை | பஸ்துன்றட்ட தே.க.க.க. களுத்துறை | ஸ்ரீ பாத தே.க.க.க. நுவரெலியா | நில்வலா தே.க.க.க. மாத்தறை | மட்டக்களப்பு தே.க.க.க. மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் தே.க.க.க. யாழ்ப்பாணம் | சியனே தே.க.க.க. கம்பஹா | ருவன்புர தே.க.க.க. இரத்தினபுரி | வயம்ப தே.க.க.க. குருநாகல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 244 | 360 | 271 | 338 | 227 | 230 | 440 | 305 | 375 |

### சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் தாதி அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக உணர்வுப்பூர்வமான தாரி அலுவலர்களை உருவாக்குவதன் மூலம் சிறுவர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த சகல தலையீடுகளையும் சிறுவர்களின் உச்ச நலனுக்காக மேற்கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தாதியர் கல்லூரிகளை மையமாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 04 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட்டன. இதன் மூலம் விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 729 பேர் ஆவார்கள்.

| தாதியர் பயிற்சிக் கல்லூரி | அநுராதபுரம் | கொழும்பு | அம்பாறை | காலி |
|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | 01 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 85 | 45 | 273 | 326 |

**சிறுவர் பாதுகாப்பு தொடர்பான ஊடக நடவடிக்கைகள், தகவல்கள், கல்வி மற்றும் தொடர்புசாதன கருவிகள் அபிவிருத்தி, தினங்களைக் கொண்டாடுதல் மற்றும் சம்பவங்கள், கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள், தே.சி.பா.அ.சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம், முகப்புத்தகம், யூரியுப் மற்றும் ரிவிட்டர்( YouTube மற்றும் twitter) என்பவற்றை பேணிவருவது தொடர்பான தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி தொடர்பாக சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டுவது தொடர்பான தகவல்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தி சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டுவது இதன் அடிப்படை நோக்கமாகும். இதன் போது செய்தி அறிவித்தல்களை வெளியிடுதல், கல்வி, தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை வடிவமைத்தல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துர்நடத்தை தொடர்பில் நாளாந்த செய்திப் பத்திரிகைகளை ஒழுங்குறுத்துதல், வெகுசன ஊடகங்களின் மூலம் சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டல், நாட்களை கொண்டாடுதல், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம், பேஸ்புக், யூரியுப், ரிவிட்டர் கணக்குகளைப் பேணிவருவதும் மேற்கொள்ளப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை நிகழ்ச்சிகள் 36 தொடர்பில் வளவாளர் பங்களிப்பு வழங்கப்பட்டது. 04 செய்தி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. ஊடகவியலாளர்களை விழிப்புணர்வூட்டும் 01 நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகள் 05 உம் நடாத்தப்பட்டன. 144 பேருக்கு தகவல்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

ஊடக திட்டமொன்றும் மேற்கொள்ளப்பட்டது. நாட்களை கொண்டாடுவதன் கீழ் 2023 உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை தொணிப்பொருளாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட சித்துவிலி சித்தம் அகில இலங்கை சித்திரப் போட்டி, போஸ்டர் மற்றும் கார்ரூன் போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டியவர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய வெற்றியாளர்கள் 48 பேர் மற்றும் மாவட்ட மட்டத்தில் வெற்றியாளர்கள் 733 பேர் என்ற வகையில் மொத்தம் 781 பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். கிடைத்த மொத்த சித்திர ஆக்கங்களின் எண்ணிக்கை 16277 ஆகும்.

**விசேட விசாரணை, விசாரணைகளை ஒழுங்குறுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்குறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் நீதிமன்ற செயன்முறைகள் தொடர்பான சைபர் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

சிறுவர் துஷ்பிரயோகங்களிலினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு அரவணைப்புச் செய்துகொடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும். அதற்காக சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கமைய மேற்கொள்ளப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விசேட பொலிஸ் பிரிவு நீதிமன்றங்களில் ஆஜராகும் சந்தர்ப்பங்கள் 2158 ஐ பூர்த்தி செய்துள்ளது. (மேல் நீதிமன்றம் 1051, நீதவான் நீதிமன்றம் 1108) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டப் பிரிவினால் நீதிமன்றத்தில் ஆஜராவது 37 உம் 1419 பேருக்கு சட்ட உதவி வழங்குவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வருகைதந்து மற்றும் தொலைபேசி மூலமாக சைபர் கண்காணிப்பு முறைப்பாடுகள் 166 கிடைத்துள்ளன.

| மாதம் | சனவரி | பெப்ருவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | செப்தெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடேச பொலிஸ் அலகு நீதிமன்றத்தில் ஆஜரான எண்ணிக்கை | 278 | 252 | 250 | 110 | 224 | 212 | 189 | 142 | 194 | 239 | 212 | 131 |
| சட்டப் பிரிவு நீதிமன்றத்தில் ஆஜரான எண்ணிக்கை | 07 | 04 | 06 | 02 | 02 | 04 | 03 | - | 01 | 03 | 05 | 01 |
| சட்ட உதவி வழங்கப்பட்ட எண்ணிக்கை | 166 | 118 | 158 | 153 | 130 | 120 | 98 | 79 | 97 | 82 | 114 | 104 |
| சைபர் கண்காணிப்பு முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 14 | 13 | 13 | 13 | 19 | 16 | 14 | 14 | 13 | 16 | 08 | 13 |

**சிறுவர்களுக்கு சாதகமான முறையில் வீடியோ வாக்குமூலங்களை ஒளிப்பதிவு செய்யும் அலகுகளை தாபித்தல், பேணிவருதல் மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல்.**

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்கள் இரண்டாவது தடவையும் பாதிக்கப்படுவதை தடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார தலைமையகம் மற்றும் வடக்கு கொழும்பு போதனா வைத்தியசாலையில் (ராகம) சிறுவர் இல்ல வளவில் புதிய சிறுவர்களுக்கு சாதகமான வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு மூலம் சிறுவர்களின் சாட்சியங்கள் வீடியோ ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டு 252 வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வது நிறைவு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவின் பேரில் சாட்சியங்களின் 225 ஒளிப்பதிவு சுருல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

| மாதம் | சனவரி | பெப்ருவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | செப்தெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீடியோ சாட்சியங்களை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 32 | 40 | 30 | 16 | 20 | 28 | 26 | 08 | 11 | 05 | 13 | 23 |
| பதிவு செய்யப்பட்ட வீடியோ சாட்சியங்களில் விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை | 12 | 07 | 12 | 06 | 12 | 12 | 10 | 25 | 32 | 50 | 34 | 13 |

**தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை**

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை குறைத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கான அச்சுறுத்தலைத் தடுத்தல், கல்வி மற்றும் உடல், உள சுகாதாரத்தை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் சிறுவர் மைய உளவியல் உளவியல் சமூக உதவிகள் சிறுவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இந்த சேவை மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர்கள் 828 பேருக்கு உளவியல் சமூக தலையீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் சிறுவர்கள் 783 பேருக்கு உளவியல் சமூக உதவிகள் மற்றும் தலையீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் சிறுவர்கள் தொடர்பான பின்னாய்வுகள் 397 மேற்கொள்ளப்பட்டன. மேலும், இதற்கு மேலதிகமாக உளவியல் சமூக ஆலோசனைகள் 157 மற்றும் சம்பவக் கருத்தரங்குகள் 26 நடாத்தப்பட்டன. வீடியோ சாட்சியமளிப்பதை ஒளிப்பதிவு செய்வதற்காக சிறுவர்களை உளவியல் ரீதியாக முன் ஆயப்படுத்தும் பொருட்டு 09 தடவைகள் நீதிமன்றங்களில் ஆஜராகி அவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டார்கள்.

| மாதம் | சனவரி | பெப்ருவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | செப்தெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உளவியல் சமூக உதவி மற்றும் தலையீடுகளின் எண்ணிக்கை | 150 | 58 | 140 | 81 | 39 | 95 | 30 | 56 | 69 | 82 | 82 | 96 |
| பின்னாய்வுகளின் எண்ணிக்கை | 39 | 72 | - | 42 | 50 | 27 | 78 | 05 | 12 | 04 | - | - |
| உளவியல் சமூக ஆலோசனைளின் எண்ணிக்கை | 25 | 22 | 27 | 23 | 08 | 16 | 09 | 07 | 05 | 07 | 07 | 08 |
| நீதிமன்றங்களில் ஆஜராகியுள்ள எண்ணிக்கை | 01 | 02 | 01 | - | - | - | - | 02 | 02 | 01 | 01 | - |

**சிறுவர் துஷ்பிரயோக மீட்புப் பாடவிதானம்**

பாதிக்கப்பட்ட சிறுவர்களை உளவியல் சமூக ரீதியாக மீட்டெடுத்து அவர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவர்கள் மீண்டும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதை தடுப்பதன் மூலம் ஆரோக்கியமாக ஆளுமையை அவர்கள் மத்தியில் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு இலங்கையில் முறையான, பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளை வழங்குவதற்காக சிகிச்சைசார் மாதிரியமைப்பொன்றாக இந்த மீட்புப் பாடவிதானத்தை பயன்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டில் ஆங்கில மொழி மற்றும் சிங்கள மொழி மூலமான மீட்புப் பாடவிதானங்களை தரப்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

**விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்**

விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களில் சிறுவர்களுக்கு இடம்பெறக்கூடிய சகல வகையிலுமான துஷ்பிரயோங்களிலிருந்தும் சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அந்நிறுவனங்களின் தலைவர்களை ஆரம்பத்தில் விழிப்புணர்வூட்டிய பின்னர் முறையான முறையியல் ஒன்றை தாபிப்பது இதன் நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டில் 15 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 570 ஆகும்.

| மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | பதுளை | மொனராகலை | திருகோணமலை | அம்பாறை | குருநாகல் | கண்டி | மாத்தளை | கேகாலை | இரத்தினபுரி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 40 | 08 | 35 | 45 | 34 | 45 | 32 | 35 | 35 | 80 | 10 | 45 | 45 | 41 | 40 |

**புலம்பெயர் ஊழியர்களின் சிறுவர்கள் சகல வகையிலுமான வன்முறைகளிலிருந்தம் பாதுகாக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யும் "குடும்ப சந்திப்பு" தொழில்நுட்பக் கருவியை அறிமுகம் செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

புலம்பெயர் உழியர்களின் குடும்பங்களுடன் நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அலுவலர்களுக்கு "குடும்ப சந்திப்பு" தொழில்நுட்பக் கருவி தொடர்பான செயலமர்வுகளை நடாத்தியமை மற்றும் இந்தத் தொழில்நுட்பக் கருவியை மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் பயன்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டில் 01 செயலமர்வு நடாத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 43 பேர் ஆவார்கள்.

**கரையோர வலயங்களை சூழவுள்ள கிராமங்களில் வாழும் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலை கட்டியெழுப்புவதற்காக அமுல்படுத்தப்படுகின்ற விசேட நிகழ்ச்சித்திட்டம்**

கரையோர வலயங்களை சூழ வாழும் குடும்பங்களை சிறுவர்களுக்குப் பாதுகாப்பான குடும்பங்களாக மாற்றியமைத்து அங்கு வாழும் சிறுவர்களை சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்து, மகிழ்ச்சியுடன் வாழ்பவர்களாக மாற்றியமைத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபடுகின்ற உணர்வுப்பூர்வமான அலுவலர்களை கரையோர வலயங்களை சூழ உருவாக்குவது இதன் முக்கிய நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டில் 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 402 பேர் ஆவார்கள்.

| மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை | திருகோணமலை | அம்பாறை | த்தளம் | யாழ்ப்பாணம் | ல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 01 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 43 | 28 | 76 | 33 | 30 | 35 | 30 | 32 | 35 | 30 | 30 |

**தோட்டத்துறையை மையமாகக் கொண்டு வாழும் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலை கட்டியெழுப்புவதற்காக அமுல்படுத்தப்படுகின்ற விசேட நிகழ்ச்சித்திட்டம்**

தோட்டத்துறையை சூழ வாழும் குடும்பங்களை சிறுவர்களுக்குப் பாதுகாப்பான குடும்பங்களாக மாற்றியமைத்து அங்கு வாழும் சிறுவர்களை சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்து, மகிழ்ச்சியுடன் வாழ்பவர்களாக மாற்றியமைத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபடுகின்ற உணர்வுப்பூர்வமான அலுவலர்களை தோட்டத்துறையை சூழ உருவாக்குவது இதன் முக்கிய நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டில் 16 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 724 பேர் ஆவார்கள்.

| மாவட்டம் | கொழும்பு | களுத்துறை | காலி | மொனராகலை | குருநாகல் | கண்டி | மாத்தளை | நுவரெலியா | கேகாலை | இரத்தினபுரி | பதுளை | மாத்தறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | 01 | 03 | 02 | 01 | 01 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 39 | 70 | 30 | 112 | 47 | 53 | 36 | 35 | 126 | 75 | 56 | 45 |

### சமயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது, சமயத்தளங்களில் சிறுவர்களுக்கு இடம்பெறக்கூடியதான சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக முறையான முறையியல் ஒன்றைத் தாபிப்பதாகும். 2023 ஆம் ஆண்டில் 15 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 582 பேர் ஆவார்கள்.

| மாவட்டம் | நுவரெலியா | கேகாலை | புத்தளம் | ஹம்பாந்தோட்டை | பதுளை | இரத்தினபுரி | மொனராகலை | முல்லைத்தீவு | களுத்துறை | மாத்தறை | காலி | கொழும்பு | மாத்தளை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 02 | 01 | 01 | 02 | 01 | 01 | 01 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 45 | 45 | 27 | 26 | 45 | 49 | 78 | 45 | 45 | 65 | 40 | 42 | 30 |

### பிரதேச மட்டத்தில் சமுதாயத்தில் சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் ஒவ்வொரு பிள்ளையையும் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக முறையான முறையியல் ஒன்றைத் தாபிப்பது இதன் முக்கிய நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டில் 1192 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 74720 பேர் ஆவார்கள்.

| மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | காலி | மாத்தறை | ஹம்பாந்தோட் | பதுளை | மொனராகலை | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | குருநாகல் | கண்டி | மாத்தளை | நுவரெலியா | அநுராதபுரம் | பொலன்னறுவை | கேகாலை | இரத்தினபுரி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 45 | 61 | 05 | 34 | 134 | 30 | 03 | 46 | 04 | 20 | 105 | 01 | 100 | 41 | 85 | 15 | 48 | 11 | 94 | 112 | 179 | 01 | 08 | 03 | 07 |

### விசேட பொலிஸ் புலனாய்வுகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு, 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக மற்றும் வேறு முறைகளில் கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு இயங்கி வருகின்றது.

**2023 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

| **தொடர் இல.** | **தவறு** | **அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை** | **விசாரணை செய்யப்பட்டு வரும் எண்ணிக்கை** | **விசாரணை பூர்த்தியடைந்த எண்ணிக்கை** | **பொய்யானவை** | **நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவை** | **நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட எண்ணிக்கை** | **வெளி பொலிஸ் நிலையங்களுக்கு விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டவை** |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறு தவறுகள் | 05 | - | 05 | - | 05 | 04 | - |
| 02 | பல்வேறு முறைப்பாடுகள் | - | - | - | - | - | - | - |
| 03 | பராயமடையாதவர்கள் மீதான குற்றச் செயல்கள் | 12 | - | 12 | - | 12 | 08 | 01 |
| **முழு மொத்தம்** | | **17** | - | **17** | - | **17** | **12** | **01** |

# புகைப்படங்களின் தொகுப்பு

## 01 . பெருந்தோட்டத்துறையை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

கொத்மலை





## 02. கரையோர வலயத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்





## 03. தாதி அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

அநுராதபுரம்





## 04. தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

மாத்தறை – நில்வலா





## 05. பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்





## 06. “மாணவர் தூதுவர்” பாடசாலை மூத்த மாணவ தலைவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பிட்கான தேசிய நிகழ்ச்சி





**07. “பல்கலைக்கழக மாணவ தூதுவர்” பல்கலைக்கழக மாணவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பிட்கான தேசிய நிகழ்ச்சி**





**08. அகில இலங்கை சித்திர, சுவரொட்டி, மற்றும் கார்ட்டூன் போட்டி**





**இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (இ.தே.சி.பா.அ)**
**டிசம்பர் 31 2023 உடன் முடிவடையும் நிதியாண்டுக்கான கணக்கீட்டு கொள்கைகள்**

1. பொதுவான தகவல்கள்

தே.சி.பா.அதிகாரசபையானது 1998ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இல. 330, தலவத்துகொட வீதி, மடிவெல, ஸ்ரீ ஜயவர்தனபுர எனும் இடத்தில் அதனது பிரதான அலுவலகம் அமைந்துள்ளது.

2. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்.

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்ட கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மாற்றமான கொள்கைகள் ஏதும் இருப்பின் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் நிதி நிலைமை கூற்று( ஐந்தொகை), நிதிச்செயலாற்றுகை ( வருமான அறிக்கை), பங்குகளில் மாற்றம் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

3. தயாரிப்பிற்கான அடிப்படை

நிதி அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. 1972 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 8 (அ) (xxvi) மற்றும் பிரிவு 42 (ஊ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய தே.சி.பா. அதிகாரசபை இலங்கையில் வரி செலுத்த வேண்டியதில்லை. நிதிக்கூற்றுக்கள் வரலாற்று செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**தே.சி.பா.அதிகார சபை கீழ்வரும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை (இ.பொ.து.க.நி) பின்பற்றியுள்ளது.**

இ.பொ.து.க.நி. 1 - நிதிக்கூற்றுக்களை முன்வைத்தல்.
இந்த நியமம் நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் கடந்தகால நிதிக் கூற்றுக்களோடும் ஏனைய நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களோடும் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்துவத்தும் வகையில் முன்வைக்கப்படுதல் வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தை குறிப்பிடுவதற்கானதாகும். இந்த குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு இந்த நியமம் நிதிக்கூற்றுக்களை முன்வைப்பதற்கான முழுமையான அக்கறை, அவற்றின் கட்டமைப்புக்கான

வழிகாட்டல், திரண்ட அடிப்படையில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்திற்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகள் என்பவற்றை வரையறை செய்துள்ளது. குறிப்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை அடையாளம் காணுதல், அளவிடுதல், வெளிப்படுத்தல் என்பவை வேறு இ.பொ.து.க.நியமங்களால் கையாளப்பட்டுள்ளது.

இ.பொ.து.க.நி 2 - காசுப்பாய்ச்சல் கூற்று
காசுப்பாய்ச்சல் கூற்று என்பது காசுப்பாய்ச்சலுக்கான மூலங்கள், அறிக்கையிடும் காலப்பகுதியில் காசு செலவிடப்பட்ட பொருட்கள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறான காசுமீதி என்பவற்றை அடையாளப்படுத்துகிறது. ஒரு நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் பற்றிய தகவல் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு பொறுப்பாண்மை, தீர்மானமெடுத்தல் நோக்கங்களுக்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பயனளிக்கிறது.பொதுத்துறை நிறுவனமொன்று எவ்வாறு தனது செயல்பாடுகளுக்குத் தேவையான நிதியினை திரட்டுகிறது என்பதையும் குறித்த நிதி எந்த விதத்தில் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு காசுப்பாய்ச்சல் கூற்று அனுமதிக்கிறது. நிறுவனத்தினுடைய செயல்பாடுகளின் நீடித்த தன்மை போன்ற வள ஒதுக்கீடு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அதனை மதிப்பீடு செய்வதற்கும் பயனாளிகளுக்கு காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் காலப்பகுதி மற்றும் அவற்றின் நிச்சயத்தன்மை என்பவை பற்றிய தெளிவு அவசியமாகிறது. இந்த நியமத்தின் குறிக்கோள் என்னவெனில், செயல்படுத்தல், முதலீடு செய்தல், நிதியளித்தல் நடவடிக்கைகள் முதலான காலப்பகுதியிலிருந்து காசுப்பாய்ச்சலை

வகைப்படுத்தும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மூலம் ஒரு நிறுவனத்தின் காசு மற்றும் காசுக்குச் சமனானவையில் ஏற்படும் வரலாற்றுரீதியான மாற்றத்தைப் பற்றிய தகவல்களை வழங்குவதை தேவைப்படுத்துவதாகும்.
இ.பொ.து.க.நி 3 - கணக்கட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்
இந்த நியமம் கணக்கீட்டு முறைமை மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளிலும் ஏற்படும் மாற்றங்களை வெளிப்படுத்தல் மற்றும் தவறுகளைச் சரிசெய்தல் என்பவற்றுடன் கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல், அவற்றை மாற்றுதல் என்பவற்றுக்கான பிரமாணங்களை குறிப்பிடுவதற்கானதாகும். ஒரு நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களின் பொருத்தப்பாட்டையும் நம்பகத்தன்மையையும் கடந்தகால நிதிக் கூற்றுக்களோடும் ஏனைய நிறுவனங்களது நிதிக்கூற்றுக்களோடும் இணங்கிச் செல்லும் தன்மையையும் மேம்படுத்துவதனை இந்நியமம் நோக்காகக் கொண்டுள்ளது.

1. தேய்மானம்

காணி தேய்மானத்திற்கு உட்பட்டதல்ல. ஏனைய சொத்துக்களுக்கான தேய்மானம் மதிப்பிடப்பட்டுள்ள அவற்றின் பயனுள்ள வாழ்நாளுக்கு ஏற்ப அவற்றின் கிரயத்தை ஒதுக்கீடு செய்வதற்காக நேர் கோட்டு முறையைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஆதனம், பொறி மற்றும் சாதனம் பயன்பாட்டிற்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும் போது அதனது தேய்மானம் ஆரம்பித்து அது ஐந்தொகையிலிருந்து நீக்கப்படும் வரை தொடரும்.

| | |
|---|---|
| கட்டிடம் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| அலுவலக தளபாடம் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| கணினி மற்றும் துணைக்கருவிகள் | 25% |
| விளையாட்டுப் பொருட்கள் | 15% |
| இசைக் கருவிகள் | 25% |
| விவசாய உபகரணங்கள் | 25% |

குறித்த நன்கொடை முகவருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு இணங்க, கருத்திட்ட நிதியினைப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட எந்தவொரு ஆதனம், பொறி மற்றும் சாதனத்தை தே.சி.பா.அதிகாரசபை உள்வாங்கவில்லை. கருத்திட்ட நிதியினூடாக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் சாதனம் நன்கொடை முகவருக்குச் சொந்தமானதாகும். அவற்றின் உடைமை தே.சி.பா.அதிகாரசபைக்கு மாற்றப்படும் வரை கருத்திட்டங்களுக்கான பிரத்தியேக சொத்துப் பதிவேடு பேணப்படுகிறது.

1. கடன் தீர்ப்பு

காணிக்கான கடன் தீர்ப்பு குத்தகைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏனைய சொத்துக்கள் தேய்மான வீதத்திற்கு சமமாக கீழ்வரும் வீதத்தில் கடன் தீர்ப்புக்கு உட்பட வேண்டும்.

| **காணியின் விபரம்** | **குத்தகைக் காலம் (ஆண்டுகள்)** |
|---|---|
| காணி(2000) | 50 |
| காணி(2016) | 30 |

| **ஏனைய சொத்துக்கள** | **கடன் தீர்ப்பு வீதம்** |
|---|---|
| கட்டிடம் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| அலுவலக தளபாடம் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| கணினி மற்றும் துணைக்கருவிகள் | 25% |
| விளையாட்டுப் பொருட்கள் | 15% |
| இசைக் கருவிகள் | 25% |
| விவசாய உபகரணங்கள் | 25% |

**கணக்கீட்டு குறிப்புகள்**

குறிப்பு 01-: கடன் தீர்ப்பு

குறித்த கிரயங்களை ஈடு செய்யும் நோக்கில் வழங்கப்பட்ட மானியங்களுடன் தொடர்புடைய கிரயங்களை நிறுவனம் செலவாக அங்கீகரிக்கும் காலம் முழுவதும் மானியங்கள் ஒரு முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளப்படுத்தப்படும்.

குறிப்பு 02-: எதிர்பாராத பொறுப்பு

அதிகாரசபையுடைய இடைநிறுத்தப்பட்ட ஒரு ஊழியர் தொடர்பில் எழும் சட்ட வழக்குகள் விடயத்தில் தே.சி.பா.அதிகாரசபை எதிர்பாராத பொறுப்பை கொண்டுள்ளது.

குறிப்பு 03-: ஒத்திவைக்கப்பட்ட வருமானம்

2023 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்களுக்கு எதிரான வருடாந்த மூலதன மானிய கடன் தீர்த்தல் பெறுமானம் ஒத்திவைக்கப்பட்ட வருமான கணக்கில் குறிப்பு 1 பீ இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 04-: திரண்ட செலவுகள்

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த திரண்ட செலவு 31.01.2024 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்டுள்ள திரண்ட செலவுகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது.

குறிப்பு 05-: பணிக்கொடை ஒதுக்கீடு

2023 ஆம் ஆண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த ஊழியர்களுக்காக கணிப்பிடப்பட்டது.

குறிப்பு 06-: இறுதிக் கையிருப்பு

காகிதாதிகளின் ,றுதிக் கையிருப்பு சராசரிக் கிரய அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**
**2023.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| விபரம் | குறிப்பு | ரூபா 2023 | ரூபா 2022 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டெழும் கொடை - திறைசேரி | | 279,390,000.00 | 274,380,000.00 |
| - ஏனைய நிறுவனங்கள் | 1(அ) | 3,957,163.00 | 436,612.00 |
| - ஏனைய வருமானங்கள் | 1(ஆ) | 15,960,197.77 | 18,399,836.87 |
| தேசிய செயற்றிட்டத்திற்கான திறைசேரியின் கொடை | | 34,447,243.97 | 31,027,255.90 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடை | 1(இ) | 437,429.14 | 202,943.76 |
| **மொத்த வருமானம்** | | **334,192,033.88** | **324,446,648.53** |
| **செலவினம்** | | | |
| நிருவாகச் செலவினம் | 2 | 260,898,047.14 | 264,162,936.01 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 3 | 79,837,639.02 | 70,102,684.18 |
| கருத்திட்டச் செலவினம் | 4 | 3,957,163.00 | 436,612.00 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் செலவினம் | 5 | 839,884.94 | - |
| நிதிச் செலவினம் | 6 | 530.73 | - |
| **மொத்த செலவினம்** | | **345,533,264.83** | **334,702,232.19** |
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை)** | 7 | **(11,341,230.95)** | **(10,255,583.66)** |

| **மிகை / குறை – பொழிப்பு** | | |
|---|---|---|
| காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை) திறைசேரி நிதியம் | | (10,938,775.15) |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை) தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | | (402,455.80) |
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை)** | | **(11,341,230.95)** |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

**2023.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று**

| விபரம் | குறிப்பு | ரூபா 2023 | ரூபா 2022 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 181,519,432.38 | 190,748,784.93 |
| குத்தகைக் காணி | 8.1 | 17,812,701.01 | 18,591,742.11 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய சொத்துக்கள் | 9 | 2,425,739.83 | 1,969,607.45 |
| | | **201,757,873.22** | **211,310,134.49** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு - எழுதுகருவி | | 1,140,746.82 | 961,545.39 |
| முதலீடும், சேமிப்பும் | 10 | 9,347,501.25 | 531,497.24 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 11 | 2,981,613.58 | 10,426,783.25 |
| முற்பணக் கொடுப்பனவு | 12 | 392,792.85 | 640,803.89 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 13 | 3,684,796.85 | 6,190,966.96 |
| | | **17,547,451.35** | **18,751,596.73** |
| **மொத்த சொத்துக்கள்** | | **219,305,324.57** | **230,061,731.22** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடை ஒதுக்கம் | | 72,932,907.50 | 66,134,780.00 |
| கருத்திட்ட கணக்குகளின் மிகை | 14-A | 877,075.27 | 1,456,238.27 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 14-B | 1,693,044.44 | 2,095,500.24 |
| | | **75,503,027.21** | **69,686,518.51** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நின்ற செலவினம் | 15 | 8,729,111.57 | 2,865,411.81 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 16 | 950,893.50 | 1,266,153.50 |
| | | **9,680,005.07** | **4,131,565.31** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **85,183,032.28** | **73,818,083.82** |
| **தேறிய சொத்துக்கள்** | | **134,122,292.29** | **156,243,647.40** |
| **நிதியீட்டல்** | | | |
| மூலதனக் கொடைகள் | 17 | 38,516,248.32 | 41,957,104.80 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 160,366,469.85 | 166,669,981.25 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | (64,760,425.88) | (52,383,438.65) |
| | | **134,122,292.29** | **156,243,647.40** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
## 2023.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டக் கூற்று

| விபரம் | குறிப்பு | ரூபா 2023 | ரூபா 2022 |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| பொதுவான செயற்பாடுகளிலிருந்தான மிகை/(குறை) | | (11,341,230.95) | (10,255,583.66) |
| **முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்** | | | |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்பு | | (1,438,212.08) | (2,528,957.51) |
| மூலதன கொடை | | - | (11,077.53) |
| **காசல்லாத மாற்றங்கள்** | | | |
| தேய்மானம் | 8 | 13,336,809.06 | 12,166,941.82 |
| குத்தகை காணி தேய்மானம் | 8.1 | 779,041.10 | 779,041.10 |
| அன்பளிப்புக்களின் மூலம் கிடைத்த நிலையான சொத்துக்கள் | | (3,409,700.48) | (6,199,100.00) |
| மீள் மதிப்பீடு செய்த நிலையான சொத்துக்கள் | | - | (83,832,231.70) |
| சொத்துக்கள் அகற்றல் தேய்மானம் | | (355,015.00) | (1,675,054.64) |
| மூலதனக் கொடை அன்பளிப்பு | | - | 2,663,600.00 |
| தேய்மானம் செய்த மூலதனக் கொடை | | - | (12,945,982.92) |
| தேய்மானம் செய்த கருத்திட்ட நிதியம் | | (3,957,163.00) | (436,612.00) |
| தேய்மானம் செய்த மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | (6,303,511.40) | 83,829,147.45 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு / (குறைவு) | | 5,863,699.76 | (281,337.94) |
| குறுங்கால ஒதுக்கங்களின் அதிகரிப்பு / (குறைவு) | | 26,100.00 | (348,000.00) |
| இருப்பு (அதிகரிப்பு / குறைவு) | | (179,201.43) | (114,426.62) |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு / குறைவு) | | (55,999.54) | 1,299,352.99 |
| முன்செலுத்தல்கள் (அதிகரிப்பு / குறைவு) | | 248,011.04 | (97,740.94) |
| பணிக்கொடைப் பங்களிப்பு | | 8,170,077.50 | 8,431,387.50 |
| பணிக்கொடை செலுத்தல் | | (1,713,310.00) | (1,551,867.50) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசோட்டம்** | | **(329,605.42)** | **(11,108,502.10)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (697,756.03) | (1,581,276.30) |
| நிலையான சொத்து அகற்றல் | | 355,015.00 | 1,689,216.41 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய கணக்குகள் (அதிகரிப்பு / குறைவு) | | (456,132.38) | (1,969,607.45) |
| முதலீட்டுப் பயன்கள் | | (550,616.06) | 1,272,813.32 |
| நிலையான வைப்பு அதிகரிப்பு | | (764,218.74) | (2,677,587.60) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(2,113,708.21)** | **(3,266,441.62)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்** | | | |
| கருத்திட்ட நிதிக்கான ஏற்பாடுகள் | 14 | 3,378,000.00 | 24,000.00 |
| மூலதனக் கொடை பெறுகை | 17 | (3,440,856.48) | 4,928,244.10 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம்** | | **(62,856.48)** | **4,952,244.10** |
| **காசும், காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய குறைவு** | | **(2,506,170.11)** | **(9,422,699.62)** |
| **காலப்பகுதியின் ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | **6,190,966.96** | **15,613,666.58** |
| **காலப்பகுதியின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும்** | 13 | **3,684,796.85** | **6,190,966.96** |

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை**

**2023.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று**

ரூபா

| | மூலதனக் கொடை | மீள்மதிப்பீட்டுச் சேர்மம் | தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்கள் | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|
| **2022 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி** | **43,569,799.47** | **34,038,634.65** | **(39,403,453.72)** | **38,204,980.40** |
| **விரிவான வருமானம்** | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | (10,458,527.42) | (10,458,527.42) |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் அல்லது செலவினம் | (1,612,694.67) | 132,631,346.60 | (2,521,457.51) | 128,497,194.42 |
| **2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **41,957,104.80** | **166,669,981.25** | **(52,383,438.65)** | **156,243,647.40** |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீராக்கல் செய்தல் | 3,673,726.25 | - | (1,438,212.08) | 2,235,514.17 |
| ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் | - | - | (10,938,775.15) | (10,938,775.15) |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் அல்லது செலவினம் | (7,114,582.74) | (6,303,511.40) | - | (13,418,094.14) |
| **2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி** | **38,516,248.31** | **160,366,469.85** | **(64,760,425.88)** | **134,122,292.28** |

**நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்**

| **குறிப்பு 1 ஏ** | ரூபா. **2023** | ரூபா. **2022** |
|---|---|---|
| **மீண்டுவரும் கொடைகள் - ஏனைய கொடை முகவர்கள்** | | |
| யுனிசெப் செயல் திட்டம் | 3,141,750.00 | - |
| மக்கள் வங்கி | 410,413.00 | 36,612.00 |
| சுனாமி அனுசரனை வருமானம் (டெய்லி மிரர்) | 405,000.00 | 400,000.00 |
| **மொத்தம்** | **3,957,163.00** | **436,612.00** |

| **குறிப்பு 1 பீ** | ரூபா. **2023** | ரூபா. **2022** |
|---|---|---|
| **ஏனைய வருமானங்கள்** | | |
| அமைச்சினால் மீளளிக்கப்பட்ட வருமானம் | - | 3,607,000.00 |
| வட்டி வருமானம், | 964,858.68 | 471,182.88 |
| இடர்கடன் வட்டி | 115,405.87 | 15,911.47 |
| வேறு வருமானம் | 747,183.06 | 806,542.84 |
| ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் | 14,115,850.16 | 12,945,982.92 |
| நன்கொடைகள் | - | 290,040.75 |
| நிலையான சொத்துக்கள் அகற்றல் | 16,900.00 | 263,176.01 |
| **மொத்தம்** | **15,960,197.77** | **18,399,836.87** |

| **குறிப்பு 1 பீ (1)** | ரூபா. **2023** | ரூபா. **2022** |
|---|---|---|
| **அமைச்சினால் மீளளிக்கப்பட்ட வருமானத்தின் கூறுகள்** | | |
| சமூகப் பாதுகாப்பு செயற்பாட்டுத் திட்டம் | - | 2,782,000.00 |
| 24 மணி நேர இலவச தொலைபேசி உதவிச் சேவை செயற்பாட்டுத் திட்டம் | - | 825,000.00 |
| **மொத்தம்** | - | **3,607,000.00** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 1சீ** | **2023** | **2022** |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து பெற்றவை | | |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடைகள் | 437,429.14 | 202,943.76 |
| **மொத்தம்** | **437,429.14** | **202,943.76** |

குறிப்பு 2 - நிர்வாகச் செலவுகள

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 2.1 | **2023** | **2022** |
| **சம்பளம் மற்றும் படிகள்** | | |
| ஊழியர் சம்பளங்கள் | 150,563,526.76 | 150,370,123.67 |
| ஊ. சே. நி | 21,747,410.36 | 21,946,994.27 |
| ஊ. ந. நி | 5,454,042.68 | 5,505,663.97 |
| மாதாந்த கொடுப்பனவு | 23,766,110.29 | 24,313,244.51 |
| விசேட கொடுப்பனவு | 70,661.65 | 34,507.60 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 1,680,007.61 | 2,122,907.24 |
| விடுமுறைக் கொடுப்பனவு | 79,045.50 | 92,519.25 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | 30,614,242.17 | 31,660,927.39 |
| பணிக்கொடை பங்களிப்பு | 8,170,077.50 | 8,431,387.50 |
| பதில் கடமை கொடுப்பனவு | 5,148,949.40 | 4,911,951.87 |
| தொழில் பயிலுநர் பயிற்சிக் கொடுப்பனவு | 1,747,000.00 | 1,357,750.00 |
| எரிபொருள் மற்றும் வாகன கொடுப்பனவு | 8,184,973.22 | 9,354,746.29 |
| மொத்தம் | **257,226,047.14** | **260,102,723.56** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 2.2 | **2023** | **2022** |
| **போக்குவரத்து செலவுகள்** | | |
| போக்குவரத்து மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு - மாவட்ட உத்தியோகத்தர் | 3,358,464.67 | 3,443,212.27 |
| அலுவலக உத்தியோகத்தர்கள் | 54,950.00 | 69,175.00 |
| வாகனக் கூலி | 258,585.33 | 364,897.18 |
| வெளிநாட்டு பயணச்செலவுகள் | - | 182,928.00 |
| **மொத்தம்** | **3,672,000.00** | **4,060,212.45** |

**குறிப்பு 3 - ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்**

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 3.1** | **2023** | **2022** |
| **வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள்** | | |
| காகிதாதிகளும் அலுவலக தேவைகளும் | 3,206,429.19 | 2,736,262.52 |
| மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான காகிதாதிகள் | 1,059,362.18 | 1,312,454.16 |
| செய்தித் தாள்கள் | 332,160.00 | 218,710.00 |
| எரிபொருள் | 1,242,700.00 | 1,806,634.91 |
| **மொத்தம்** | **5,840,651.37** | **6,074,061.59** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 3.2 | **2023** | **2022** |
| **பராமரிப்புச் செலவுகள்** | | |
| மோட்டார் வாகனங்கள் | 2,438,423.72 | 1,394,411.68 |
| கணனி மற்றும் உபகரணங்கள் | 996,905.41 | 1,402,143.27 |
| கட்டிடம் மற்றும் அலுவலகம் | 535,957.00 | 549,073.00 |
| **மொத்தம்** | **3,971,286.13** | **3,345,627.95** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 3.3 | 2023 | 2022 |
| **ஒப்பந்த சேவைகள்** | | |
| தொலைபேசி | 5,187,762.99 | 5,204,289.21 |
| முத்திரை மற்றும் தபால் | 725,200.00 | 401,940.00 |
| மின்சாரம் | 5,386,653.56 | 2,682,785.18 |
| நீர் | 380,852.66 | 252,955.92 |
| காப்புறுதி | 554,520.41 | 707,939.48 |
| பாதுகாப்பு சேவை | 3,996,776.58 | 3,444,924.83 |
| சுத்தப்படுத்தும் சேவை | 1,989,086.25 | 1,641,179.00 |
| அச்சிடுதல் | 11,315.00 | 275,988.00 |
| மொழிபெயர்ப்பு கட்டணங்கள் | - | 1,112.50 |
| விகிதங்கள் மற்றும் வரிகள் | 81,816.38 | 105,454.38 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 476,100.00 | 450,000.00 |
| பணிப்பாளர்சபை செலவீனங்கள் | 732,236.10 | 639,348.00 |
| நேர்காணல் குழு செலவீனங்கள் | 189,344.00 | 123,800.00 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 131,595.00 | 105,128.00 |
| இணையத்தள பராமரிப்பு | 315,381.60 | 418,378.60 |
| சேவை உடன்படிக்கைகள் - கணனி மற்றும் ஏனையவை | 788,007.87 | 501,354.23 |
| 1929 உணவுக் கொடுப்பனவு | 299,200.00 | 215,400.00 |
| **மொத்தம்** | **21,245,848.40** | **17,171,977.33** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 3.4 | 2023 | 2022 |
| **தேய்மானம் / கடன் தீர்ப்பு** | | |
| குத்தகைக் காணி | 779,041.10 | 779,041.10 |
| கட்டிடம் | 2,727,517.50 | 1,050,872.85 |
| மோட்டார் வாகனங்கள் | 4,844,500.00 | 4,844,500.00 |
| தளபாடம் | 1,007,277.02 | 1,549,539.13 |
| உபகரணங்கள் | 3,060,358.66 | 3,186,178.87 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | |
| - தளபாடம் | 750.00 | 2,750.00 |
| யு.என்.டி.பி நிகழ்ச்சித் திட்டம் - உபகரணங்கள் | 267,399.79 | 267,399.79 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | |
| - மோட்டார் வாகனங்கள் | 660,300.00 | 660,300.00 |
| - உபகரணங்கள் | 748,609.09 | 374,004.18 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனங்கள் | - | 211,300.00 |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 20,097.00 | 20,097.00 |
| **மொத்தம்** | **14,115,850.16** | **12,945,982.92** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 3.5 | 2023 | 2022 |
| **ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்** | | |
| இதர செலவீனங்கள் | 109,734.00 | 245,187.10 |
| தவிசாளர் உபசரிப்புச் செலவு | 421,336.75 | 535,181.89 |
| **மொத்தம்** | **531,070.75** | **780,368.99** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 3.6 | 2023 | 2022 |
| **NPA – செலவுகளை செயற்படுத்தல்** | | |
| தேசிய கொள்கையை செயற்படுத்துதல் மற்றும் தரவுத்தளத்தை பராமரித்தல். | 3,882,612.07 | 1,626,153.13 |
| குழந்தையின் சிறந்த நலனைப் பாதுகாத்தல். | 12,165,058.08 | 8,161,261.53 |
| சிறுவர் பராமரிப்பு சேவையை கண்காணித்தல், சிறுவர் து஁்பிரயோகத்தைத் தடுத்தல, தொடர்ந்த கண்காணித்தல். | 11,116,560.25 | 8,960,902.59 |
| முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 3,845,328.36 | 2,142,984.20 |
| சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல். | 341,708.50 | 61,825.75 |
| சுனாமி பேரிடர் நிவாரணத் திட்டம். | 568,665.00 | 1,088,037.20 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், பட்டறைகள், கலந்தரையாடல்கள் மற்றும் பல | 1,384,507.95 | 1,681,749.50 |
| திறன் அபிவிருத்தி, பராமரிப்பு நடவடிக்கை | 828,492.00 | 2,454,751.50 |
| ஜேஈயு சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு | - | 825,000.00 |
| 24 மணிநேர சிறுவர் உதவித் தொலைபேசி அழைப்பக்கான செயல்திட்டம். | - | 2,782,000.00 |
| **மொத்தம்** | **34,132,932.21** | **29,784,665.40** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 4 | 2023 | 2022 |
| நிகழ்ச்சித் திட்ட செலவுகள் | | |
| யுனிசெப் செயல் திட்டம் | 3,141,750.00 | - |
| சிதுவிலி சித்தம் செலவுகள் 2021 | 410,413.00 | 36,612.00 |
| சுனாமி அனுசரனைச் செலவுகள் டெய்லி மிரர் | 405,000.00 | 400,000.00 |
| **மொத்தம்** | **3,957,163.00** | **436,612.00** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 5 | 2023 | 2022 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதிய செலவுகள் | - | - |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதிய கொடுப்பனவுகள் | 839,884.94 | |
| **மொத்தம்** | **839,884.94** | **-** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு 6** | **2023** | **2022** |
| நிதி செலவு | | |
| வங்கிக் கட்டணங்கள் | 530.73 | - |
| **மொத்தம்** | **530.73** | **-** |

| குறிப்பு 7 | **2023** | **2022** |
|---|---|---|
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)** | | |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) – திறைசேரி | (10,938,775.15) | (10,458,527.42) |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) - நிகழ்ச்சித் திட்டம் | - | - |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) - தே.சி.பா.நிதி | (402,455.80) | 202,943.76 |
| **மொத்தம்** | **(11,341,230.95)** | **(10,255,583.66)** |

| குறிப்பு 8 | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் | 1/1/2023 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | கூட்டல் | அகற்றல் | முந்தைய ஆண்டு சீராக்கம் | 31/12/2023 இல் உள்ளவாறான இறுதி நிலுவை |
| செலவு/மதிப்பீடு | | | | | |
| தே.சி.பா.அ | | | | | |
| கட்டிடம் | 136,375,875.00 | - | - | - | 136,375,875.00 |
| மோட்டார் வாகனங்கள் | 48,445,000.00 | - | - | - | 48,445,000.00 |
| தளபாடம் | 17,665,309.87 | 225,832.50 | - | 1,481,639.00 | 19,372,781.37 |
| உபகரணங்கள் | 61,827,329.49 | 471,923.53 | (12,465.00) | 2,261,416.00 | 64,548,204.02 |
| | **264,313,514.36** | **697,756.03** | **(12,465.00)** | **3,743,055.00** | **268,741,860.39** |
| நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள் | | | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம் - தளபாடம் | 501,446.00 | - | - | - | 501,446.00 |
| ILO சிறுவர் கடத்தல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - தளபாடம் | 754,701.00 | - | - | - | 754,701.00 |
| ILO ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 6,969.00 | - | - | - | 6,969.00 |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | - | - | - | 2,232,158.65 |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 1,035,193.00 | - | - | - | 1,035,193.00 |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 96,275.00 | - | - | - | 96,275.00 |
| பீசீஎன் நிகழ்ச்சித் திட்டம் – கணனி | 1,079,182.89 | - | (342,550.00) | - | 736,632.89 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - தளபாடம் | 79,147.50 | - | - | - | 79,147.50 |
| - உபகரணங்கள் | 85,757.00 | - | - | - | 85,757.00 |
| யு.என்.டி.பி தளபாடம் | | | | | |
| - தளபாடம் | 33,112.80 | - | - | - | 33,112.80 |
| - உபகரணங்கள் | 1,782,665.28 | - | - | - | 1,782,665.28 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 8,378,609.00 | - | - | - | 8,378,609.00 |
| - உபகரணங்கள் | 11,028,244.68 | - | - | - | 11,028,244.68 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் | 2,113,000.00 | - | - | - | 2,113,000.00 |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 133,980.00 | - | - | - | 133,980.00 |
| | **29,340,441.80** | - | **(342,550.00)** | - | **28,997,891.80** |
| மொத்தம் | **293,653,956.16** | **697,756.03** | **(355,015.00)** | **3,743,055.00** | **297,739,752.19** |

| குறிப்பு 8 தொடர்... | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|
| தேய்மானம் | 1/1/2023 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | 2023 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் | அகற்றல் | மந்தைய ஆண்டு சீராக்கம் | 31/12/2023 இல் உள்ளவாறான இறுதி நிலுவை |
| தே.சி.பா.அ | | | | | |
| கட்டிடம் | - | 2,727,517.50 | - | | 2,727,517.50 |
| மோட்டார் வாகனங்கள் | 16,505,166.00 | 4,844,500.00 | - | | 21,349,666.00 |
| தளபாடம் | 14,563,456.08 | 1,007,277.02 | - | 168,054.40 | 15,738,787.50 |
| உபகரணங்கள் | 51,942,886.50 | 3,060,358.66 | (12,465.00) | 165,300.12 | 55,156,080.28 |
| | **83,011,508.58** | **11,639,653.18** | **(12,465.00)** | **333,354.52** | **94,972,051.28** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 501,446.00 | - | - | - | 501,446.00 |
| ILO இனது கடத்தல் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 754,701.00 | - | - | - | 754,701.00 |
| ILO இனது ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 6,969.00 | - | - | - | 6,969.00 |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | - | - | - | 2,232,158.65 |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 1,035,193.00 | - | - | - | 1,035,193.00 |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 96,275.00 | - | - | - | 96,275.00 |
| பீசீ.என் நிகழ்ச்சித் திட்டம் – கணனி | 1,079,182.89 | - | (342,550.00) | - | 736,632.89 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - தளபாடம் | 79,147.50 | - | - | - | 79,147.50 |
| - உபகரணங்கள் | 83,757.00 | 750.00 | - | - | 84,507.00 |
| யு.என்.டி.பி தளபாடம் | | | | | |
| - தளபாடம் | 33,112.80 | - | - | - | 33,112.80 |
| - உபகரணங்கள் | 267,399.79 | 267,399.79 | - | - | 534,799.58 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 3,027,609.00 | 660,300.00 | - | - | 3,687,909.00 |
| - உபகரணங்கள் | 8,531,876.13 | 748,609.09 | - | - | 9,280,485.22 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் | 2,113,000.00 | - | - | - | 2,113,000.00 |
| சேவ் த சில்ரன் – உபகரணங்கள் | 51,834.89 | 20,097.00 | - | - | 71,931.89 |
| | **19,893,662.65** | **1,697,155.88** | **(342,550.00)** | - | **21,248,268.53** |
| **மொத்தம்** | **102,905,171.23** | **13,336,809.06** | **(355,015.00)** | **333,354.52** | **116,220,319.81** |

| குறிப்பு 8 தொடர்... | | | ரூபா. |
|---|---|---|---|
| தேறிய ஏட்டுப் பெறுமதி | கிரயம் | திரட்டப்பட்ட தேய்மானம் | தேறிய ஏட்டுப் பெறுமதி |
| **தே.சி.பா.அ** | | | |
| கட்டிடம் | 136,375,875.00 | 2,727,517.50 | 133,648,357.50 |
| மோட்டார் வாகனங்கள் | 48,445,000.00 | 21,349,666.00 | 27,095,334.00 |
| தளபாடம் | 19,372,781.37 | 15,738,787.50 | 3,633,993.87 |
| உபகரணங்கள் | 64,548,204.02 | 55,156,080.28 | 9,392,123.74 |
| | **268,741,860.39** | **94,972,051.28** | **173,769,809.11** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 501,446.00 | 501,446.00 | - |
| ILO இனது ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 754,701.00 | 754,701.00 | - |
| சட்ட விரோதம் தொடர்பான ILO நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 6,969.00 | 6,969.00 | - |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | 2,232,158.65 | - |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 1,035,193.00 | 1,035,193.00 | - |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 96,275.00 | 96,275.00 | - |
| பீசீஎன் நிகழ்ச்சித் திட்டம் - கணனி | 736,632.89 | 736,632.89 | - |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - தளபாடம் | 79,147.50 | 79,147.50 | - |
| - உபகரணங்கள் | 85,757.00 | 84,507.00 | 1,250.00 |
| யு.என்.டி.பி நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - தளபாடம் | 33,112.80 | 33,112.80 | - |
| - உபகரணங்கள் | 1,782,665.28 | 534,799.58 | 1,247,865.70 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 8,378,609.00 | 3,687,909.00 | 4,690,700.00 |
| - உபகரணங்கள் | 11,028,244.68 | 9,280,485.22 | 1,747,759.46 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் | 2,113,000.00 | 2,113,000.00 | - |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 133,980.00 | 71,931.89 | 62,048.11 |
| | **28,997,891.80** | **21,248,268.53** | **7,749,623.27** |
| **மொத்தம்** | **297,739,752.19** | **116,220,319.81** | **181,519,432.38** |

| குறிப்பு 8.1 | | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| குத்தகை காணி | குத்தகை காலம் (வருடங்கள்) | குத்தகைக் கிரயம் | கடந்த வருடம் வரைக்குமான திரட்டப்பட்ட கடன் தீர்ப்பு | ஆரம்ப நிலுவை | 2023ஆம் ஆண்டுக்கான கடன் தீர்ப்பு | முன் கொண்டு செல்லப்படும் நிலுவை |
| குத்தகை காணி (2000) | 50 | 8,422,459.89 | 3,874,331.56 | 4,548,128.33 | 168,449.20 | **4,379,679.13** |
| குத்தகை காணி (2016) | 30 | 18,317,757.08 | 4,274,143.30 | 14,043,613.78 | 610,591.90 | **13,433,021.88** |
| | | **26,740,216.97** | **8,148,474.86** | **18,591,742.11** | **779,041.10** | **17,812,701.01** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 9 | 2023 | 2022 |
| நீண்ட காலமாக பெறத்தக்கவையாக உள்ளவை | | |
| இடர்கடன் | 2,425,739.83 | 1,969,607.45 |
| **மொத்தம்** | **2,425,739.83** | **1,969,607.45** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 10 | 2023 | 2022 |
| **முதலீடுகளும் சேமிப்புகளும்** | | |
| **பணிக்கொடை நிதி முதலீட்டுக் கணக்கு - 261605** | 476,574.23 | 231,037.56 |
| சுனாமி சேமிப்புக் கணக்கு - 679016 | 64,004.18 | 62,393.29 |
| இடர்கடன் சேமிப்புக் கணக்கு - 89945554 | 541,534.89 | 238,066.39 |
| நிலையான வைப்பு | 8,265,387.95 | 7,501,169.21 |
| **மொத்தம்** | **9,347,501.25** | **8,032,666.45** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 11 | 2023 | 2022 |
| **பெறத்தக்க கணக்குகள்** | | |
| பண்டிகை முற்பணம் | 135,250.00 | 156,750.00 |
| காசு முற்பணம் | 1,558,700.05 | 2,103,641.19 |
| பெறத்தக்க கணக்குகள் | 162,681.00 | 186,371.63 |
| பெறத்தக்க இடர் கடன்கள் | 714,569.53 | 461,908.21 |
| சேவ் த சில்ரன் இடமிருந்து மீளப் பெறக் கூடியது | 410,413.00 | 16,943.01 |
| **மொத்தம்** | **2,981,613.58** | **2,925,614.04** |

| | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| குறிப்பு 12 | 2023 | 2022 |
| **முன்கூட்டியே செலுத்தும் கட்டணங்கள்** | | |
| காப்புறுதி | 137,110.20 | 366,228.37 |
| சேவை உடன்படிக்கை | 255,682.65 | 274,575.52 |
| **மொத்தம்** | **392,792.85** | **640,803.89** |

| குறிப்பு 13 | ரூபா. 2023 | ரூபா. 2022 |
|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | | |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு 228076 | 3,019,423.97 | 4,806,172.21 |
| - நடைமுறைக் கணக்கு 71252941 | 504,848.14 | 843,270.01 |
| மக்கள் வங்கி - நடைமுறைக் கணக்கு 174-1-001-4-0347385 | 160,524.74 | 541,524.74 |
| மொத்தம் | **3,684,796.85** | **6,190,966.96** |

குறிப்பு -14 A

**நிகழ்ச்சித்திட்ட நிதி இருப்பு விபரம்**

ரூபா

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | ஆரம்ப நிலுவை | முந்தைய ஆண்டு சீராக்கல் | 2023 நிதி கிடைப்பனவு | 2023 செலவுகள் | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|
| சுனாமி அனுசரணை - டெய்லி மிரர் | 541,524.74 | - | 24,000.00 | (405,000.00) | 160,524.74 |
| சயிலட் பண்ட் | 504,300.53 | - | - | - | 504,300.53 |
| மக்கள் வங்கி | 410,413.00 | - | - | (410,413.00) | - |
| யுனிசெப் நிதி | - | - | 3,354,000.00 | (3,141,750.00) | 212,250.00 |
| **மொத்தம்** | **1,456,238.27** | - | **3,378,000.00** | **(3,957,163.00)** | **877,075.27** |

குறிப்பு -14 B

**சிபா.அ. ச. நிதி - கணக்கு சாராம்சம்**

ரூபா

| நிதியின் பெயர் | ஆரம்ப நிலுவை | முந்தைய ஆண்டு சீராக்கல் | கிடைப்பனவுகள் (குறிப்பு 1சி) | செலவுகள் (குறிப்பு 12) | 2020 ஆம் ஆண்டுக்காக தேறிய மிகை / பற்றாக்குறை | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| **சிபா.அ. ச. நிதி** | 2,095,500.24 | - | 437,429.14 | (839,884.94) | (402,455.80) | 1,693,044.44 |

| குறிப்பு 15 | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---:|---:|
| திரட்டப்பட்ட செலவுகள் | | |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 178,989.40 | 171,037.06 |
| பாதுகாப்பு சேவை | 434,523.73 | 297,122.96 |
| சுத்தப்படுத்தும் சேவை | 174,526.60 | 141,060.00 |
| இ.பி.எஃப். செலுத்த வேண்டியவை | 478,293.00 | |
| இ.டி.எஃப். செலுத்த வேண்டியவை | 71,743.95 | |
| போக்குவரத்து மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு | 661,650.91 | 810,704.38 |
| மின்சாரம் | 502,960.69 | 233,846.50 |
| நீர் | 7,263.02 | 4,628.93 |
| காகிதாதிகள் | - | 48,250.00 |
| சி.பா.நிதியத்தின் பிரதான கணக்கு | 410,413.00 | 16,943.01 |
| தொலைபேசி கட்டணங்கள் | 429,741.98 | 437,604.73 |
| வேறு கடன் வழங்குனர் | 2,600,427.14 | 577,400.00 |
| இணையத்தள பராமரிப்பு | 27,024.96 | 26,214.24 |
| செய்தித் தாள் கொள்வனவு | 28,790.00 | 28,100.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | 2,564.25 | - |
| தொழில் பயிலுநர் பயிற்சிக் கொடுப்பனவு | 73,750.00 | 72,500.00 |
| செலுத்தவேண்டிய சம்பளம் | 1,469,990.32 | - |
| | 1,176,458.62 | - |
| **மொத்தம்** | **8,729,111.57** | **2,865,411.81** |

| குறிப்பு 16 | 2023 ரூபா. | 2022 ரூபா. |
|---|---:|---:|
| குறுங்கால ஒதுக்கீடு | | |
| கணக்காய்வு கட்டண ஒதுக்கீடு | 476,100.00 | 450,000.00 |
| குறுங்கால பணிக்கொடை நிதிய ஒதுக்கீடு | 474,793.50 | 816,153.50 |
| **மொத்தம்** | **950,893.50** | **1,266,153.50** |

ரூபா.

| குறிப்பு 17 | 1/1/2023 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | 2023 ஆம் ஆண்டுக்கான வருமானங்கள் | 2023 ஆம் ஆண்டுக்கான செலவுகள் | முந்தைய ஆண்டு சீராக்கம் | 31/12/2023 இல் உள்ளவாறான இறுதி நிலுவை |
|---|---:|---:|---:|---:|---:|
| செயற்பாட்டு மூலதனம் | | | | | |
| மூலதன மானியம் | | | | | |
| அரச மானியங்கள் - மூலதனம் | 15,398,565.63 | 697,756.03 | (4,443,024.20) | 1,412,310.25 | 13,065,607.71 |
| யுனிசெப் - மானியம் | 2,666,468.55 | - | (805,309.09) | - | 1,861,159.46 |
| மூலதன மானியம் - யு.என்.டி.பி | 1,515,265.49 | - | (267,399.79) | - | 1,247,865.70 |
| வாங்கிய சொத்து கையகப்படுத்தல்/ அபிவிருத்தி நடவடிக்கை | 8,251.25 | - | (4,950.75) | - | 3,300.50 |
| மூலதன மானியம் - குத்தகை காணி | 14,043,613.77 | - | (610,591.90) | - | 13,433,021.87 |
| மூலதன மானியம் - சேவ் த சில்ரன் | 82,145.11 | - | (20,097.00) | - | 62,048.11 |
| அமைச்சினது மானியம் (மூலதன கையகப்படுத்தல்) | 3,108,628.00 | - | (920,857.17) | - | 2,187,770.83 |
| ஜனாதிபதி அலுவலகத்தினால் வழங்கப்பட்டமோட்டார் வாகனம் | 5,134,167.00 | - | (610,000.00) | - | 4,524,167.00 |
| மூலதன மானியம்(கேபிடல் கிரேண்ட்)- ICTA | - | - | (130,108.87) | 2,261,416.00 | 2,131,307.14 |
| **மொத்தம்** | **41,957,104.80** | **697,756.03** | **(7,812,338.77)** | **3,673,726.25** | **38,516,248.32** |

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. VOT/B/NCPA/01/2023/20 திகதி : 2024 யூன் மாதம் 11 ஆம் திகதி

தவிசாளர்,தேசிய சிறுவர் பாதுபாப்பு அதிகாரசபை.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படையாக விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 7 இன் 52 மற்றும் 53 ஆம் பந்திகளுக்கு முரணாக மீளாய்வு ஆண்டில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் ரூபா 6,303511 ஆன பிற்போடப்பட்ட வருமானமாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வு ஆண்டின் குறை மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கின் நிலுவை மேற்படி தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) பதவி விலகிய அலுவலர்கள் 04 பேர் சார்பாக மீளாய்வு ஆண்டில் ரூபா 474,794 ஆன தொகை பணிக்கொடையாக ஒதுக்கப்பட்டிருந்தமை காரணமாக மேற்படி தொகையினால் ஆண்டுக்கான குறை மற்றும் பணிக்கொடை ஒதுக்கம் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வு ஆண்டில் கொடையாக கிடைத்திருந்த ரூபா 3,909,000 (பிரித்தானிய பவுன் 10,000) பெறுமதிமிக்க சிறுவர் துஷ்பிரயோகங்களை அறிக்கையிடுவதற்கான இணையத்தள பிரவேச மென்பொருள் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்து வழங்கப்பட்டிருந்த ரூபா 1,461,961 ஆன தரவு முறைமை கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,568,680 பெறுமதிமிக்க பாடசாலை எழுதுகருவிகளை உரிய பயனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதை உறுதி செய்வதற்கான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ)

(1) காசோட்டக் கூற்றை தயார் செய்யும் போது மிளாய்வு ஆண்டில் பெற்ற பொருள்சார் கருத்திட்ட உதவிகள் ரூபா 3,378,000 ஆன தொகை காசோட்ட வருகையாக இனங்காணப்பட்டிருந்தமை காரணமாக மற்றும் மூலதனக்

கொடையாக பெற்ற ரூபா 697,756 காசோட்ட வருஜகயாக வெளிப்படுத்துவதற்குப் பதிலாக ரூபா 3,440,856 ஆன காசோட்ட வருகையாக இனங்காணப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 760,612 இனால் காசோட்டக் கூற்றில் நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுத் தொகை மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(11) மீளாய்வு ஆண்டின் பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 14,115,850 ஆயினும், இது ரூபா 10,260,674 ஆக மற்றும் முன்னைய ஆண்டில் கிடைத்த ரூபா 3,253,206 ஆன தொகை காசோட்டக் கூற்றில் ஆண்டுக்கான குறைபாட்டுக்கு சீராக்கல் செய்தமை காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் ரூபா 601,969 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வு ஆண்டில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 2,261,461 பெறுமதிமிக்க உபகரணங்கள் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் அன்பளிப்பு பெறுகையாக மொத்த பெறுமதியையும் கணக்குகளில் பதிவு செய்ய வேண்டுமாயினும், இதில் ரூபா 130,108 பிற்போடப்பட்ட வருமானமாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கு மற்றும் ரூபா 2,131,307 நிதி நிலைமைக் கூற்றில் மூலதனக் கொடையாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கு அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவானதும், உகந்ததும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 அதிகாரசபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காக தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதனால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை வெளிப்பத்துவதில்லை என்பதுடன் நான் அது பற்றி எவ்வகையிலும் சான்றுப்படுத்துவதோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாக இருப்பது ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாகக் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பொருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் நான் மேற்கொண்டுள்ள பணிகளின் அடிப்படையில், குறித்த ஏனைய தகவல்கள் அதன் போதியளவில் தவறான வெளிப்படுத்தல் இருப்பதாக நான் தீர்மானம் செய்யும் பட்சத்தில், மேற்படி விடயத்தை நான் அறிக்கையிடுவது அவசியமாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக் கூற்றுக்களாவன, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுபாடுகளை மேற்கொள்ளும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

**2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள் விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணிவந்திருந்தது என்பது,

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபை சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன என்பது,

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டில் நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது,

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும்

கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் அதிகாரசபையுடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

| **சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகளுக்கான தொடர்பு** | **அவதானிப்பு** |
|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | மீளாய்வு ஆண்டில் 67 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,558,700 ஆன முற்பணம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

| | **தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகள்** | **அவதானிப்பு** |
|---|---|---|
| | **1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம்** | |
| (அ) | சட்டத்தின் 14 (ஊ) பிரிவு | சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைக்கு 2019 அக்டோபர் மாதம் 29 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், இந்தக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான ஐந்து வருட செயற்றிட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வு ஆண்டின் இறுதித் திகதி வரை முடியாது போயுள்ளது. இதன் காரணமாக குறித்த தேசிய நடவடிக்கைக் குழு, மாகாண குழுக்கள், மாவட்ட மற்றும் பிரதேச குழுக்கள், சுயாதீன தொழில்நுட்ப வட்டங்களாக தாபிக்கப்படல் மற்றும் நடாத்துவதற்கு அதிகாரசபை தவறியுள்ளது. |
| (ஆ) | சட்டத்தின் 14 (ஊ) பிரிவு | மீளாய்வு ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோக வழக்கு நடவடிக்கைகள் பற்றி சட்டப் பிரிவினால் கோரப்பட்டிருந்த தகவல்கள் 96 பொலிஸ் நிலையங்களிலிருந்து கிடைத்திருக்கவில்லை. மேலும் சிறுவர் துர்நடத்தை பற்றிய வழக்கு நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தும் பணிகளை |

மேற்கொள்ள அதிகாரசபையின் சட்டப் பிரிவு தவறியுள்ளது.

| | | |
|---|---|---|
| (இ) | சட்டத்தின் 14 (உ)(எ)(ஒ) பிரிவு | 2011 ஆம் ஆண்டு முதல் இந்த அறிக்கையின் திகதி வரை அதிகாரசபைக்கு சிறுவர் துர்நடத்தைகள் தொடர்பிலானத முறைப்பாடுகள் 123,732 கிடைத்துள்ளதுடன், இவற்றில் முறைப்பாடுகள் 52,922 அதாவது 43 சதவீதமானவை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனவே சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்கள் தொடர்பான விசாரணை செய்யும் செயன்முறையை சிறுவர் பராயமடைய முன்னர் நிறைவு செய்வதற்கான முறையியலை தயார் செய்வதற்கு அதிகாரசபைக்கு உள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை தவறியுள்ளது.<br><br>சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் மிக முக்கிய செயற்பணியை நிறைவேற்றுகின்ற மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களுக்கு பாரியளவில் வெற்றிடங்கள் காணப்படுவதும், நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பது தொடர்பாக அதிகாரசபையில் முறையான பொறிமுறையொன்று அமுலில் இல்லாமையும் தொடர்ந்தும் தீர்க்கப்படாத முறைப்பாடுகள் பாரியளவில் அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது. |
| (ஈ) | 14(க) பிரிவு | தரவு முறைமையை தாபித்து சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொலிஸ், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் நேர்வரிசை அமைச்சுக்கு இடையே முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் பொறிமுறையை அறிமுகம் செய்வதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக நாட்டில் கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாகள் எத்தனை என்பது மற்றும் மேற்படி முறைப்பாடுகளின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து உறுதி செய்துகொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியாத நிலைமை காணப்படுவதும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| (உ) | 14(ஒ)பிரிவு | • மாகாண மட்டத்தில் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்துகொள்ளும் அலகுகளை ஆரம்பிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரையும் 7 மாகாணங்களில் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்துகொள்ளும் அலகுகளை தாபித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தென் மாகாணத்தில் விடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்துகொள்ளும் அலகு 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், காணப்பட்ட குறைபாடுகள் |

காரணமாக 2015 ஆம் ஆண்டு முதல் இந் அலகு மற்றும் கிடைத்துள்ள தொழில்நுட்ப உபகரணங்கள் செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன், மீண்டும் மேற்படி தொழில்நுட்ப உபகரணங்களை பொருத்துவதற்கு ரூபா 7,760,500 ஆன மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

- சட்ட மாஅதிகர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்துகொள்ளும் வழிகாட்டல்களின் 2.5 பிரிவுக்கு அமைய பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தங்குமிட வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக பாதுகாப்பு இல்லமொன்று (Safe House) அறிக்கையின் திகதி வரை அதிகாரசபையினால் பேணிவரத் தவறியுள்ளது.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொண்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) 2014 ஆம் ஆண்டு முதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வாய்மூலம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு உரித்தான கட்டிடம் அறிக்கைத் திகதி வரையும் எந்தவொரு பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்படாது செயற்படாத நிலையில் காணப்பட்டு வந்ததுடன், மேற்படி கட்டிடத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வு ஆண்டில் மாத்திரம் ரூபா 1,084,684 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அருகே அமைந்துள்ள காணி ரூ. 18,317,757 ஆன பெறுமதிக்கு 2016 ஆம் ஆண்டில் 30 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அக்காணி அறிக்கையின் திகதி வரையும் எந்தவொரு பணிக்கும் பயன்படுத்தப்படாது பயனற்றதாக காணப்பட்டது.

(இ) அதிகாரசபையின் உதவி முகாமையாளர் (நிகழ்ச்சித்திட்டம்) 12 வருடங்களுக்கும் மேலாக வெளி நிறுவனமொன்றுக்கு விடுவிக்கப்பட்டிருப்பதன் காரணமாக இப்பதவியினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை வினைத்திறன்மிக்கவாறு நிறைவேற்ற முடியாது போயுள்ளது.

(ஈ) 2016 சனவரி 25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு முரணாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் புலனாய்வு அலுவலர், முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் தகவல்) தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவி, முகாமையாளர் நிகழ்ச்சித்திட்டம், உதவிப் பணிப்பாளர் (ஊடகம் மற்றும் தகவல்) ஆகிய பதவிகளுக்கு ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகள் இல்லாத அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

**டபிள்யு. பீ.சி. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.